## 11.01.2022ம் திகதிய 46வது மாதாந்த சபைக்கூட்டம்

நேரம் : பி.ப 2.30 மணி
காலம் : 11.01.2022ம் திகதி செவ்வாய்க்கிழமை
இடம் : சபா மண்டபம் தலைமை அலுவலகம்
தலைமை : கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன்

**கூட்டத்தில் பங்குபற்றியோர்**

- திரு.பத்மநாதன் மயூரன் - கௌரவ தவிசாளர்
- திரு.இராஜமனோகரன் ஜெயகரன் - கௌரவ உபதவிசாளர்
- திருமதி.கௌசலா சிவா - கௌரவ உறுப்பினர்
- திரு.கணேசு முருகையா - கௌரவ உறுப்பினர்
- திரு.இராசையா இராசலிங்கம் - கௌரவ உறுப்பினர்
- திரு.செல்வநாயகம் சிவலோஷன் - கௌரவ உறுப்பினர்
- திரு.தெய்வேந்திரம் கிரிதரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.கபிரியேல்பிள்ளை திருஞானராஜா - கௌரவ உறுப்பினர்
- திருமதி.ரவிதாஸ்.கோமதி - கௌரவ உறுப்பினர்
- திருமதி.சச்சிதானந்ததேவி செல்லத்துரை - கௌரவ உறுப்பினர்
- திருமதி.அழகேந்திரம் அகிலாண்டரூபி - கௌரவ உறுப்பினர்
- திரு.வல்லிபுரம் ஸ்ரீகணேசா - கௌரவ உறுப்பினர்
- செல்வி.விஜயகுமார் சிந்துஜா - கௌரவ உறுப்பினர்
- திரு.வஸ்ரியாம்பிள்ளை சிறில்றூமன் விஜேந்திரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி - கௌரவ உறுப்பினர்
- திரு.குமாரசாமி மதுசுதன் - கௌரவ உறுப்பினர்
- திருமதி.வாசுகி சுதாகர் - கௌரவ உறுப்பினர்
- செல்வி.குலேந்திரன் பிரிந்தா - கௌரவ உறுப்பினர்
- திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் - செயலாளர்

**கூட்டத்திற்கு சமூகமளிக்காதோர்**

- திரு.கந்தையா குகானந்தன் - கௌரவ உறுப்பினர்

திரு.சுப்பிரமணியம் விஜயகுமாரன் - கௌரவ உறுப்பினர்

மேற்படி கூட்டமானது பி.ப 2.30 மணிக்கு கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் அவர்கள் தலைமையில் ஒரு நிமிட மௌன அகவணக்கத்துடன் கூட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். அடுத்து சபைக்கீதம் இசைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்களையும் வணக்கத்தினை தெரிவித்துக்கொண்டு இன்றைய கூட்டத்திற்கு கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் சமூகமளிக்க முடியவில்லை என எழுத்து மூலமாக கடிதம் சபைக்கு அறியத்தந்துள்ளார். அத்துடன் சபைக்கு வருகை தரும் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் நாம் ஏற்கனவே எடுத்த தீர்மானத்திற்கு அமைவாக எவ்வித முன்னறிவிப்பும் இன்றி சபைக்கூட்டத்திற்கு வருகை தராத உறுப்பினர்கள் கொடுப்பனவு சபையால் நிறுத்துவது என ஏற்கனவே தீர்மானித்தமையினை தொடர்ந்தும் இறுக்கமான நடைமுறைக்கு கொண்டு செல்வது சாலச்சிறந்தது என தாம் நினைப்பதாகவும் அதற்கு கௌரவ உறுப்பினர்களின் அபிப்பிராயம் இருந்தால் தெரிவிக்குமாறும் சபையினரைக் கேட்டுக்கொண்டார். அதன்போது அனைத்து கௌரவ உறுப்பினர்களும் அதனை ஏற்றுக்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து நிகழ்ச்சி நிரலில் முதலாவது விடயம் சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரித்தல். 45 வது மாதாந்த கூட்ட அறிக்கை (டிசம்பர்), 26.11.2021ம் திகதிய 24வது விசேட கூட்ட அறிக்கை மற்றும் 07.12.2021ம் திகதிய 25வது விசேட கூட்ட அறிக்கை ஆகியன அங்கீகரித்தல். குறித்த அறிக்கைகளில்

திருத்தமிருந்தால் அதனைத் தெரிவிக்குமாறும் சரியாயின் அவற்றினை அங்கீகரிக்குமாறும் தெரிவித்ததை தொடர்ந்து குறித்த அறிக்கைகள் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 11.01.2022/01**
13.12.2021ம் திகதிய 45வது சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/02**
26.11.2021ம் திகதிய 24வது விசேட கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/03**
07.12.2021ம் திகதிய 25வது விசேட கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அறிக்கை அங்கீகரித்தலைத் தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் மகிழ்ச்சிகரமான செய்தி எமது சபைக்குரிய காலம் மீண்டும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக நாம் எவ்வளவு வினைத்திறனாக மக்களுக்கான சேவையினை திறம்பட செய்வதற்கு எல்லோரும் ஒருமித்து ஒற்றுமையுடன் பயணிப்போம் என்றும் அதற்கு அனைவரது ஒத்துழைப்பினையும் கேட்டுநிற்பதாகவும் தெரிவித்தார்.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து தவிசாளர் அறிவிப்புக்கள். குறித்த தவிசாளர் அறிவிப்பில் கௌரவ தவிசாளர் அவர்களினால் 2021ம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட 3ம் கட்ட வேலைகள் தற்போது ஒப்பந்தம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் திருநெல்வேலிச்சந்தி மற்றும் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை முன் பக்க நடைபாதை அமைத்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் கொக்குவில் சந்தைக் கட்டடத்தொகுதியில் மீன் சந்தை வாயில் முன்பக்கம் மாற்றுதல், உப தபாலக வாயில் பகுதி புனரமைத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்து திருநெல்வேலி சந்தைக்கும் தேனு களஞ்சியப் பகுதிக்கும் இடைப்பட்ட வெளிக்கு கூரை அமைத்தல் வேலை ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் திருநெல்வேலிச்சந்தையில் இடம் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களை குலுக்கல் முறையில் தெரிவு செய்து 2022.01.01 முதல் புதிய இடங்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் இன்னொரு பாராட்டுடன் கூடிய மகிழ்ச்சியான செய்தி என்னவெனில் எமது சபையானது LDSP திட்ட வேலைகளில் மாநகர சபை உட்பட எல்லா சபைகளுடனும் ஒப்பிடும் போது 98% வேலைகளை பூர்த்தி செய்துள்ளது. ஏனைய சபைகள் 75% வேலைகளுக்கு அப்பால் செல்லாத நிலையில் எமது சபையானது 98% வேலைகள் பூர்த்தி செய்துள்ளமைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய எமது செயலாளர் அவர்களுக்கும் மற்றும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் பாராட்டுவதுடன் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார். அத்துடன் எமது சபைக்கு இவ் வேலைத்திட்டத்தில் மேலதிக வேலைக்காக 18 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கான நிகழ்ச்சி நிரல் அடுத்து வரும் கூட்டங்களில் தெரியப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்களின் பிரேரனைகள். அவற்றில் முதலாவது பிரேரனை சனசமூக, ஆலய நிர்வாகங்களில் பெண்களை இணைப்பது தொடர்பானது. இதனை சபையில் எடுத்துக்கொள்வதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/04**
திருமதி.சி.கௌசலா அவர்களின் சனசமூக நிலையங்கள் மற்றும் கோயில் நிர்வாகங்களில் பெண்களை இணைப்பது தொடர்பான பிரேரணையினை சபையில் எடுத்துக்கொள்வதென கௌரவ உபதவிசாளர்

திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்போது முதலாவது பிரேரனை தொடர்பாக கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு தமது பிரேரனையானது சனசமூக,கோயில் நிர்வாகங்களில் பெண்களை இணைப்பது தொடர்பானது. அனேக நிர்வாகங்களில் ஆண்கள் தான் அதிகமாக இருக்கின்றார்கள். பெண்கள் எங்காவது ஒருவர் அல்லது இருவர் தான் இருப்பார்கள். அதுவும் உறுப்பினராகத்தான் உள்வாங்கப்பட்டிருப்பார்கள். நிர்வாக ரீதியான அங்கத்துவத்தினை அவர்கள் பெற்றிருக்க மாட்டார். இந்த நிலையினை நாம் மாற்ற வேண்டும். பெண்களை சம பங்குடன் வலுப்படுத்தி அவர்களையும் சமூகத்தில் வேலைகளில் ஈடுபடுத்த வேண்டும் என்ற நோக்குடன் கிராமந்தோறும் குறித்த வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருவதாகவும் இனிவரும் காலத்திலும் செய்ய இருப்பதாகவும் தெரிவித்தார். அந்தவகையில் சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள சனசமூகநிலையம் மற்றும் கோயில் நிர்வாகங்களில் பெண்களை உள்வாங்குவது தொடர்பாக பெண்கள் தாங்களாகவே முன்வந்து இவற்றில் பங்குபற்றலாம். பொதுக்கூட்டங்களில் பங்குபற்றலாம். இவற்றில் என்ன தடை இருக்கின்றது என நாம் நினைக்கலாம். ஆனால் அனேக கூட்டங்கள் இரவு நேரங்களில் நடைபெறுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. எமது சனசமூகநிலைய உத்தியோகத்தரிடம் ஆலோசனை பெற்ற போது அவர் கூட இதற்கு ஆம் எனத்தான் பதிலளித்திருந்தார். ஆனாலும் தமது பதவிக் காலங்களில் தாம் கடமையாற்றும் சபைகளில் கூடுதலாக பகல் வேளையில் இக்கூட்டங்களை நடாத்த வேண்டிக்கொண்டதாகவும், அனேகமாக பெண்களை உள்வங்குவதை தாம் இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்திருந்தார். அண்மையில் நடைபெற்ற வாலையம்மன் சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவின் போது கூட இருவர் இணைந்திருப்பதாக அறிந்துள்ளதாகவும் அது நல்ல விடயம். ஆனாலும் இது போதாது. ஏனெனில் ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டால் அதிகமாக பெண்கள் தான் இருப்பார்கள். ஒரு கிராமத்தின் ஆண்,பெண், சிறுவர்களில் அனைவரையும் இணைப்பதே இச்சனசமூக நிலையங்களின் சேவைப்பங்களிப்பு. இவ்வாறு இருக்கையில் பெண்கள் சார்ந்த விடயங்களை பெண்கள் தொடர்பான முடிவுகளை ஆண்களே காலத்திற்கும் எடுத்துச் செல்கின்றதாக இருக்கின்றது. பெண்கள் சார்ந்த விடயங்களில் பெண்கள் முடிவெடுக்க வேண்டும். இதில் பாதிப்புள்ளாகின்றவர்கள் பெண்கள் தான். மற்றும் சேவையினைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள் பெண்கள். பெண்கள் தங்கள் கருத்துக்களை முடிவுகளை தெரிவிக்க வேண்டும். முடிவெடுக்க வேண்டிய இடங்களில் சுயமாக முடிவெடுக்க வேண்டும். இந்நிலையில் தான் தாம் குறித்த பிரேரணையினை முன்மொழிந்துள்ளதாகவும் இதுதொடர்பாக எமது சபை எமது ஆளுகைக்குட்பட்ட சனசமூகநிலையங்கள் 46 இருக்கின்றது. அவற்றில் ஒவ்வொரு வருடமும் நிர்வாகத் தெரிவு கூட்டங்களில் கட்டாயமாக பெண்களை உள்வாங்குகின்ற சந்தர்ப்பத்தை அதிகமாக்க வேண்டும். இதற்கான களமாக இதனை கட்டாயமாக்க வேண்டும் என நினைப்பதாகவும் ஆனால் 100% செய்படுத்துவது அது பெண்கள் கையில் தான் இருக்கின்றது. ஆனாலும் காலப்போக்கில் அவ்வாறான நிலையினை 50ற்கு 50 என்ற சந்தர்ப்பத்தில் அது கிடைக்காத கடந்த உள்ளூராட்சி தேர்தலில் கூட 25% இதுகள் வந்ததுகள் சபைக்கு என்றும், இதுகள் என்ன செய்யப்போகின்றதுகள் என்று எம்மை இவர்களாக பார்க்காது இதுகளாக பார்க்கின்ற நிலை ஆரம்பத்தில் எமக்கு கிடைத்திருந்தது. பெண்கள் எழுந்து உரையாற்றினால் அனேக சபைகளில் கூறும் வார்த்தைகள் இதுகள் அலம்ப ஆரம்பித்துவிட்டுதுகள். ஆனால் எமது சபைகளில் அவ்வாறு நேரடியாக கூறவில்லை. ஆகவே எமக்கு அவ்வாறான மனத்தாங்கல் வரவில்லை எனவும் ஆனால் பிற சபைகளில் இருக்கின்றது. இதுதான் உண்மை. நாம் பெண்களை எவ்வளவு தூரம் முன்நகர்த்த இருக்கின்றோமோ அவ்வளவு தூரம் பின்னகர்த்த திட்டங்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இது வேதனைக்குரிய விடயம். அந்தவகையில் எமது ஆளுகைக்குட்பட்ட இடங்களில் நூற்றுக்கு நாற்பது வீதமாவது நிர்வாகங்களில் பெண்களை இணைப்பது தொடர்பாக எமது சபை தீர்மானமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்தார். ஏனெனில் காலப்போக்கில் சரியாகும் என விட்டுவிட்டால் அது சரியாகாது. எனவே சில சட்டதிட்ட வரன்முறைகளை ஏற்படுத்தி அதன்மூலம் அவர்களை இணைப்பதன் மூலமாக எதிர்காலத்தில் அவர்களாகவே முன்வந்து தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், தமது உரிமைகளை பெற்றுக்கொள்ளவும் என்பது தமது நம்பிக்கை எனவும் ஏனைய உறுப்பினர்களும் தமது கருத்துக்களையும் தெரிவித்து பெண்களை வலுப்படுத்துகின்ற முதற்படியான ஆரம்ப கட்ட முறையாக இதனை எமது சபையால் செய்யக்கூடியதாக சேவைப்பணியில் நகர்த்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.அ.அகிலாண்டரூபி அவர்கள் பி.ப.2.45 மணியளவில் கூட்டத்திற்கு வருகை தந்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் கருத்துரைக்கையில் நல்ல விடயம். குறித்த விடயம் ஆலய மற்றும் சனசமூக நிலைய நிர்வாகசபை யாப்புக்களில் உள்வாங்கப்பட்டுள்ளது. அதனை நாம் வினைத்திறனாக செயற்படுத்தும் சந்தர்ப்பங்களில் பெண்கள் அதில் உள்வாங்கும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றது எனவும் அதற்கு மேலதிகமாக சபையால் செய்யக்கூடிய சந்தர்ப்பத்தில் அதற்கான முடிவுகளை சபையால் எடுப்போம் எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு கருத்துரைக்கையில் கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் கூறியது முற்றிலும் உண்மை எனவும் அந்தவகையில் மணியந்தோட்ட முருகன் ஆலய நிர்வாக சபையின் தலைவராக தாமே இருப்பதாகவும் சனசமூகநிலையத்திலும் தாம் இதனைக் கேட்டதாகவும் தாங்கள் உள்ளே சென்று அவர்களுடன் கலந்தரையாடும் போது சில விடயங்களை ஆண்களுடக் கதைக்க முடியாத நிலை உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். அந்தவகையில் அவர்களுடன் கதைக்க வேண்டுமெனில் ஒரு பெண் சென்றால் தான் அவர்களின் விடயங்களை அறிந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். ஆனால் சில சனசமூக நிலையங்களில் அவ்வாறு செய்யாது ஆண் உறுப்பினர்களை தான் தெரிவுசெய்து வருகின்றனர். குறித்த கூட்டங்களுக்கு பெண்கள் கட்டாயமாகச் செல்ல வேண்டும். கட்டாயமாக கோயில்களிலோ சனசமூகநிலையங்களிலோ பெண்கள் கூடுதலான பங்கு எடுக்க வேண்டும். உறுப்பினராக இல்லாது தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற முக்கிய பதவிகளில் அங்கம் வகிக்க வேண்டும். ஆனால் எமது இடத்தில் அவ்வாறில்லை. எமது ஆலயத்தில் தாம் தலைவராகவும் ஏனைய இருவரும் பெண்கள் தான் எனவும் தெரிவு செய்யப்பட்ட ஆண்கள் வருவதில்லை எனத்தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் உள்ளூராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில் எமது சபையினை பாராட்டியாக வேண்டும். வேறு சபையிலுள்ள பெண் உறுப்பினர்கள் உங்கள் சபையில் ஆண் உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர் எனக் கேட்டார்கள். எங்கள் ஆண் உறுப்பினர்கள் எமக்கு எல்லா வகையிலும் பங்களிப்பு வழங்குகின்றனர் எனத்தெரிவித்திருந்தோம். ஏனைய ஒரு சபையிலும் இல்லாத விடயம் எமது சபையில் நடைபெறுகின்றது எனக்கூறி அங்கு பெருமை கொண்டதாகவும் ஏனைய சபைகளில் ஆண் உறுப்பினர் இப்படி செய்கின்றார். இவ்வாறு சொல்கின்றார் எனக் தெரிவிக்கையில் எமது சபையில் நடைபெற்ற அத்தனை கூட்டங்களிலும் பெருமையோடு நடந்து கொண்டதை தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/05**

கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்களின் பிரேரணைக்கமைவாக சனசமூக நிலையங்கள் மற்றும் கோயில் நிர்வாகங்களில் பெண்களை இணைப்பது தொடர்பாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் இந்து கலாச்சார அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு தெளிவுபடுத்தலுடன் கூடிய கோரிக்கை கடிதம் அனுப்புவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்களின் பிரேரணையில் அடுத்து தொழிற்பேட்டை ஒன்றை உருவாக்குதல் தொடர்பான பிரேரணையினை சபையில் எடுத்துக்கொள்வதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/06**

திருமதி.சி.கௌசலா அவர்களின் தொழிற்பேட்டை ஒன்றை உருவாக்குதல் தொடர்பான பிரேரணையினை சபையில் எடுத்துக்கொள்வதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்களினால் தொழில்பேட்டை ஒன்றை உருவாக்குவது தொடர்பாக பிரேரனையினை சபையில் முன்வைக்கும் போது ஆரம்பமாகிய முதல் வருடத்தில் கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் தொழில்பேட்டை உருவாக்குதல் தொடர்பாக பிரேரனை முன்வைத்த ஞாபகம் உள்ளது. அந்தவகையில் தொழில்பேட்டை ஒன்றை

நிறுவுவது அவசியமானது. ஏனைய சபைகளுடன் ஒப்பிடும் போது வருமானம் கூடிய சபை எமது சபையாகும். நிதிவளமும் நிலவளமும் உள்ளது. நிலவளம் இல்லாவிட்டாலும் அதற்கான நிலவளத்தை கொள்வனவு செய்தேனும் நடைமுறைப்படுத்தக்கூடிய சபையாக எமது சபை இருக்கின்றது. தற்போது பொருளாதார பின்னடைவினை எதிர்நோக்கியுள்ள நிலையில் நிரந்தர வருமானம் இல்லாத குடும்பங்கள் வறுமைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் இளைஞர் யுவதிகள் ஒரு தொழிலைப் பயின்றுவிட்டு அதற்கான ஒரு இடமில்லாது சிரமப்படுவதை கவனித்திருக்கின்றோம். தச்சுத்தொழிலாளியாக இருப்பார் அவருக்கான இடம் மற்றும் ஆயுதங்கள் இல்லாதிருக்கும். அநேகமாக VTA , NITA ஆகிய நிறுவனங்கள் தொழிலைப் பழக்கிவிட்டு பயிற்சி வழங்கி விடுகின்றது. ஆனால் அதற்கான இயந்திரங்கள், உபகரணங்களை வழங்குவதில்லை. அவ்வாறான நிலையில் நாம் ஒரு தொழில் பேட்டையினை அமைப்போமேயானால் அவர்கள் தங்களின் தொழிலை பூரணப்படுத்தி தமது வாழ்கையினை வளமாக்க முடியுமென தாம் நினைப்பதாகவும் அந்தவகையில் எமது நல்லூர் பிரதேசசபையானது கட்டாயமாக தொழில்பேட்டை அமைப்பது என்ற விடயத்தினை தாமதிக்கக்கூடாது எனக்கேட்டுக்கொண்டு ஒரு வருடம் காலநீடிப்பு செய்திருக்கின்ற தருணத்தை நாம் கட்டாயமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இது சாலச்சிறந்த நேரம். இதனை நாம் தொடக்கி வைத்தால் கூட இனிவரும் காலத்தில் நிறைவுக்கு வந்தாலும் அவ்வேலைத்திட்டம் முடிந்துவிடும். அந்தவகையில் தொழில்பேட்டை ஒன்றை அமைக்க வேண்டும் என்ற நல்லூர் பிரதேச மக்களின் கோரிக்கையாக தாம் இதனை முன்வைப்பதாகத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் பி.ப.2.50 மணியளவில் வருகை தந்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் மேலும் கூறுகையில் இது ஒரு வட்டாரம் சார்ந்ததல்ல எனவும் ஒட்டுமொத்த நல்லூர் பிரதேசத்தையும் உள்ளடக்கியது. அத்தனை இளைஞர் யுவதிகளுடைய எதிர்காலம் தொடர்பனது. ஏனெனில் படித்து பட்டம் பெற்றவர்கள் கூட வீட்டில் இருக்கின்ற நிலை தான் தற்போதுள்ளது. அனைவருமே அரச ஊழியர் வருவதற்கு காத்திருக்கின்ற போது கூட ஒரு தொழில் முயற்சியாளராக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் வீட்டின் சுய பொருளாதாரத்தை கட்டியெழுப்பலாம். ஆகவே இது சிறந்ததாக இருக்குமென தாம் நினைப்பதாகவும் அதற்கான முன்னகர்த்தலை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கௌரவ உறுப்பினர் செல்வி.கு.பிரிந்தா அவர்கள் பி.ப.2.51 மணியளவில் வருகை தந்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தினைத் தெரிவித்துக்கொண்டு கருத்து தெரிவிக்கையில் கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்களினால் முன்வைத்த தொழில்பேட்டை உருவாக்குதல் எனும் பிரேரனை நல்ல விடயம். கடந்த காலங்களிலே நாம் தொழில்பேட்டை ஒன்றை அமைக்க வேண்டும் என எனது பிரேரனையாக கொண்டு வந்தேன். அது இன்று வரை கிடப்பிலிருக்க எமது ஆட்சிக்காலம் ஒரு வருடம் நீடிக்கப்பட்டுள்ளதால் நாம் ஒருவருட முடிவில் இல்லாது ஆரம்பத்தில் தொழில்பேட்டை அமைப்பதற்கான அத்திவாரம் ஒன்றை அமைக்கலாம் என்று கூறிக்கொண்டு ஏனெனில் எமது நல்லூர் பிரதேசத்திலே எவ்வளவோ இளைஞர், யுவதிகள் சமூக சீர்கேட்டில் ஈடுபட்டுச்செல்கின்றார்கள். நாம் இப்படியான தொழில்பேட்டை ஒன்றை அமைத்தால் எமது நல்லூர் பிரதேசத்தை கட்டியெழுப்பலாம் என்பது தமது நம்பிக்கை எனவும் குறித்த நம்பிக்கையில் தான் தாம் இப்பிரேரனையினை கடந்த காலத்தில் கொண்டு வந்ததாகவும் ஆனால் தற்போதை ஆரோக்கியமான தவிசாளர் வரும் சித்தரைப் புத்தாண்டிற்கு முன்னர் நாம் தொழில்பேட்டை அமைப்பதற்கான ஆரம்ப அத்திவாரத்தை இடலாம் என தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு கருத்துரைக்கையில் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள் நிறைய இருக்கின்றார்கள். படித்த பிள்ளைகள் பலர் இருக்கின்றார்கள். ஒரு தொழில்பேட்டை இருப்பதனால் சிலரது வளங்களை மேம்படுத்தலாம் என்று தாம் கருதுவதாகவும் இன்று வேலைவாய்ப்புகள் யாருக்குமே இல்லாத நிலையில் தான் இருக்கின்றது. இப்படியான தொழில்பேட்டைகளை உருவாக்கினால் அவர்களின் வாழ்வாதாரத்தினை நாம் மேம்படுத்த வேண்டும் என்பதும் தமது மனத்தின் ஆழமான கருத்து எனவும், இது நிறைவேறும் என்ற நம்பிக்கையும் நிச்சயம் இது சபையால் நிறைவேற்றப்படும் எனெனில் இச்சபையில் இருப்பவர்கள் அனைவரும் மக்கள் நலன் கருதிகளாகத்தான் இங்கிருக்கின்றனர் எனவும் இதற்கான இடையூறு இருக்காது என்பது தமது கருத்தாகும் எனத் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் கருத்துரைக்கையில் குறித்த தொழில்பேட்டை அமைத்தல் என்பது எமது நாட்டுக்கு தேவையானதொன்று. அதற்கமைவாக 2022.01.01 ஆம் திகதி 125 நபர்களுக்கு திருநெல்வேலிச்சந்தையில் புதிய இடங்கள் வழங்கப்பட்டு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் எமது அடுத்த கட்ட நடவடிக்கையாக 9 மில்லியன் செயற்பாட்டு நிதிப்பங்களிப்பில் முதலாவது தொழில் பயிற்சிக்கான திட்டத்திற்காக தையல் பயிற்சிக்காக 40 பெண்களைக் கேட்டிருக்கின்றனர். அத்துடன் 20 இளைஞர் யுவதிகளை IT கனணி பயிற்சிக்கு கேட்டுள்ளனர். அதற்கமைவாக அவர்களை தொழிலில் பயிற்சி வழங்கி LDSP திட்டத்தில் கொக்குவில் சந்தைக்கு மேல் கட்டப்படும் கட்டடத்தை தொழில்பேட்டையாகவே பயன்படுத்தலாம். அதனை பயன்படுத்துவது தொடர்பாக அடுத்துவரும் கூட்டத்தில் தீர்மானிக்கலாம். அதில் தையல் இயந்திரங்களை வழங்கி தொழில் வாய்ப்புகளை வழங்கும் சாத்தியக்கூறு உள்ளது. அத்துடன் திருநெல்வேலியிலுள்ள பாதையில்லாக் காணியில் தொழில்பேட்டை அமைப்பதற்காக நீண்ட நாட்களாக ஆராயப்பட்டு வருகின்றது. முன்காணியால் பாதை அமைப்பதற்கு காணி தருவதாகவும் ஒட்டுமொத்த காணி தருவதாகவும் கூறியிருக்கின்றார்கள். அவர்களுடன் தொடர்ந்தும் தொடர் நடவடிக்கையிலுள்ளேன். மிகவிரைவில் அதற்கான தீர்வு எட்டப்படும் என்றும் அத்தீர்வு எட்டும் போது கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் கூறியது போல தொழில்பேட்டை அமைப்பது சாலச்சிறந்ததாக அமைந்தால் அதில் தொழில்பேட்டை அமைப்பதால் நல்லூர் பிரதேச மக்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் ஏற்படும். அதேமாதிரி மேலதிக கருத்துக்கள் இருப்பின் வழங்குமாறு தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் பொலித்தீன் பாவனை தடை செய்யப்படுவதனால் தையல் பயிற்சி வழங்கும் பிள்ளைகளை வைத்து Bag தயாரித்து அதனை எல்லா இடங்களுக்கும் விற்பனைக்கு விடலாம் எனத்தெரிவித்தார்.

அதற்கு பதிலளிக்கையில் இவ்வருடம் கிட்டத்தட்ட 40 நபர்களுக்கு தொழில்பயிற்சி வழங்கும் சந்தர்ப்பத்தில் அவர்களை இதில் உள்வாங்கி தொடர்ந்து செய்யும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளலாம் எனத்தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்களது இரு பிரேரனையும் ஆரோக்கியமானது. முதலாவது விடயம் பெண்களை இணைப்பது தொடர்பாக இருக்கின்ற நிர்வாக சபைகளில் பல சபைகள் தாங்களே தொடர்ச்சியாக தமது இறுதிக்காலம் வரை உறுப்பினராக இருந்துவிட்டு செல்வதாகவே பலரது நிலைப்பாடு. அண்மையில் எமது வாலையம்மன் சனசமூகநிலைய நிர்வாகத்தெரிவு கடும் சவால்கள் மத்தியில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தெரிவு செய்யப்பட்டு ஒருமாத காலத்திற்கு மேலாகியும் இதுவரை திறப்பு ஒப்படைக்கவில்லை. சுயாதினமாக சில முடிவுகளை எடுத்து செயற்பட்டு வருகின்றனர். அந்தவகையில் பெண்களின் வகிபாகம் என்பது முக்கியமானது. அவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கும் போது அடுத்த தலைமுறைக்கு சிறந்த ஆளுமையுள்ளவர்களை உருவாக்கக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் பி.ப. 3.00 மணியளவில் கூட்டத்திற்கு சமூகமளித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் மேலும் கூறுகையில் ஆலயங்கள் சனசமூகநிலையங்களில் ஐந்து பத்து வருடங்களாக ஒரே நிர்வாகம் தான் இருப்பதாகவும் அவற்றினை கலைத்து புதிய நிர்வாகங்கள் தெரிவுக்கு ஒரு கட்டுக்கோப்பாக பிரதேசசபையினால் சனசமூக நிலையங்களும். பிரதேசசெயலகங்களினால் ஆலய நிர்வாகங்களும் வழிநடாத்தப்பட வேண்டும். பொதுமக்கள் அறிவித்தல் வழங்கப்பட்டு பொது பகீரங்க கூட்டம் நடாத்தப்பட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது தமது அவா எனவும் எமது நல்லூர் பிரதேசசபையானது 2018ஆம் ஆண்டு உறுப்பினராக வந்தவுடன் வாலையம்மன் சனசமூக நிலையம் தொடர்பாக பிரேரனை கொண்டு வந்தேன். அது கிடப்பில் இருந்தது. புதிய தவிசாளர் திரு.ப.மயூரன் அவர்கள் வந்த பிற்பாடு குறித்த பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு பெற்று தரப்பட்டுள்ளது. அந்தவகையில் நல்லூர்பிரதேசசபைக்கு நல்லூர் பிரதேச மக்கள் சார்பாகவும் தாம் சார்பாகவும் கௌரவ தவிசாளர், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஒட்டுமொத்த மக்கள் சார்பாக நன்றிகள் தெரிவிப்பதாகத் குறிப்பிட்டார். மிகவிரைவில் பல நிகழ்ச்சி திட்டங்களை செய்வதற்கு ஆயத்தமாக உள்ளனர். கௌரவ தவிசாளர் அவர்கள் பொறுப்பை பழைய

நிர்வாகத்திடமிருந்து பெற்று எமது கைகளில் அதனை ஒப்படைத்தால் புதிய நிர்வாகம் திறம்பட பல வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் எனத்தெரிவித்த போது கௌரவ தவிசாளர் அவர்களினால் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் செல்லாது ஏற்கனவே ஏனையவையில் வாலையம்மன் சனசமூக நிலையம் தொடர்பாக கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டுச் செல்லுமாறு தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைவாக கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில் தொழில்பேட்டை அமைப்பது தொடர்பாக தாம் ஏற்கனவே குறிப்பிட்ட அலுமினிய தொழிற்சாலை மற்றும் ஆணித்தொழிற்சாலை ஆகிய இரண்டும் தொடங்கும் சந்தர்ப்பத்தில் இன்றைய இளைஞர்கள் போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகி வருகின்றனர். அவர்கள் அதிலிருந்து விடுபட்டு ஒரு வழியாக இத்தொழில்பேட்டை அமையும். நாம் பதவியில் இருக்கும் காலத்தில் எமது பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கி அவர்களது எதிர்காலம் சுபீட்சமானதாக மாற்ற வேண்டிய கடப்பாடு உள்ளதாகவும் அந்தவகையில் ஆரோக்கியமான வேலைத்திட்டங்களாக தொழில்பேட்டைகளை நிச்சயமாக நிறுவ வேண்டும். ஆணித்தொழிற்சாலை மற்றும் அலுமினிய தொழிற்சாலை ஆகியன அமைப்பது தொடர்பாக கூடுதலான கரிசினை எடுக்க வேண்டும். கௌரவ உறுப்பினர் கூறியது போல வரம் புத்தாண்டுக்குள் அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்கள் பயிற்சி பெறும் 40 பயிற்சியாளர்களையும் தொடர்ச்சியாக திருநெல்வேலியிலுள்ள வீட்டிலோ அல்லது கொக்குவில் சந்தை மேற்பகுதியில் கட்டப்படும் கட்டடத்திலோ தொழில்பேட்டை அமைப்பதற்கான தீர்மானமாக செயற்படுத்தலாம் எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களினால் எம்மால் பயிற்சி வழங்கப்படும் பயிற்சியாளரால் வடிவமைக்கப்படும் Bags நாமே ஒரு கடையினை உருவாக்கி ஏற்கனவே இருக்கும் கடைகளில் விற்பனை செய்வதிலும் பார்க்க குறைந்த விலையில் வழங்கினால் மக்கள் நிறைய மக்கள் அதனை வாங்குவார்கள் என்பது தமது கருத்தாகும் என்றார்.

கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் கருத்துரைக்கையில் தொழில்பேட்டை கட்டாயமாகத் தேவை. பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடியதாக இருக்கும். பாரிய நிதியை பயன்படுத்தி தொழிற்சாலைகள் அமைப்பதற்கு முன்னர் கச்சேரியூடாக saxsal மாதிரியான liqute தயாரித்தல் தொடர்பாக ஒரு நாள் பயிற்சி பெற்று பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மூவர் செய்து வருகின்றனர். அதற்கான மூலக்கூறுகள் கூட மிக விலை குறைவானவை. அதில் நல்ல வருமானம் ஈட்டக்கூடியதாக இருக்கும். அதேபோன்று கொக்குவில் பகுதியில் ஒருவர் ஒருநாள் பயிற்சி பெற்று தற்போது 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருவதுடன் இலாபகரமாகவும் உள்ளதாக அறியமுடிகின்றது. அந்தவகையில் நாம் எமது பகுதியில் உப்பு இருக்கின்றது. அதனை 5 அல்லது 10 ரூபாவிற்கு பெற்றுச்சென்று அயடீன் கலந்து 70 அல்லது 80 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. எனவே வரும் சித்திரை வருடத்திற்குள் ஆனையிறவு உப்பளம், தும்புத்தொழிற்சாலை, கிளிநொச்சி ஆடைத்தொழிற்சாலை ஆகியவற்றிற்கு 20 உறுப்பினர்களும் சுற்றுப்பயணம் செய்து அவை தொடர்பாக போதிய விளக்கம் பெற்று எமது பிரதேசத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் போது நாமும் முன்மாதிரியாக நின்று வேலைவாய்ப்பு வழங்கி அதற்கான உதவிகளை வழங்கலாம். இவ்வாறு பார்ப்பதற்குரிய ஒழுங்குகளை செய்தால் உதவியாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை தாம் பார்ப்பதாகவும் தாங்கள் குறிப்பிட்டதை போல உப்பு தொழிற்சாலை மற்றும் தும்புத்தொழிற்சாலை நல்ல விடயங்கள். வரும் காலத்தில் அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதாகவும் தெரிவித்தார். அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் கருத்துரைக்கையில் தொழில்பேட்டை அமைப்பது நல்ல விடயம். அதனை முன்னெடுக்க வேண்டும். அத்துடன் எமது சபை கூடி 4, 5வது அமர்வில் முன்னாள் தவிசாளர் அவர்களது தவிசாளர் அறிவிப்பில் தொழில்பேட்டை அமைத்தல் எனும் உப தலையங்கத்திற்கு கீழ் அப்போதே கொண்டுவரப்பட்டது. ஆகவே அப்பிரேரனையினையும் சுட்டி இதனை கொண்டுவருவது நல்லது எனத்தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் பிரேரனைக்கு இன்னொரு பிரேரனை

போடத்தேவையில்லை. அதற்கூடாக இதனை உள்வாங்கினால் நன்றாகவிருக்கும் எனத் தாம் நினைப்பதாகத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் கருத்துரைக்கையில் ஒரு பிரேரனையோ தீர்மானமோ 6 மாதத்திற்குள் செயற்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில் அது வலுவிலந்து போகும். தும்மால் உப்புத்தொழிற்சாலை அமைக்கும் பிரேரனையானது திர்மானமாக எடுக்கப்பட்டு ஓரிடத்தில் உப்பு தொழிற்சாலை அமைப்பதாக தீர்மானமாகவும் இருந்தது. ஆனால் 4வது வருடத்திலும் அது தீர்மானமாக மட்டும் தான் உள்ளது. இதில் பாதையில்லாத காணி அமைக்கின்றதாகத் தான் நாம் முன்னர் சிந்தித்து தான் 4 வருடமாக இங்கு வந்துள்ளோம். இன்னும் இருக்கும் காலம் நீடிக்கப்பட்ட இவ் ஒருவருடம் மட்டும் தான். இதற்கு பின்னரும் நாம் பாதையில்லாக் காணியைத் தான் எதிர்பார்ப்போமேயானால் இதுவும் கிடப்பில் தான் இருக்கும் எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தொழில்பேட்டை என்பது ஒரு தொழில் வழங்குவது அல்ல. ஒரு தொழில்பேட்டை எனில் அங்கு 10 தொழில்களை வழங்கும் உபகரணங்கள் இருக்கும். அத்தொழில்களைத் தெரிந்தவர்கள் அங்கு வந்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அங்கு இணைத்துக்கொள்பவர்கள் நிரந்தர வருமானமற்ற கிராமசேவகர் மூலமாக தெரிவுசெய்யப்படுபவர்கள் அங்கு வந்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவார்கள். தீர்மானங்களை எடுத்துவிட்டு அவை கிடப்பில் இருப்பதை விடுத்து காலநேரத்தை கருத்தில் கொண்டு தரப்பட்ட காலத்தை பயன்படுத்த வேண்டும் என கௌரவ தவிசாளர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் தையல் பயிற்சி வழங்கப்படுகின்ற 40 யுவதிகளை வைத்து சபைக்குச் சொந்தமான திருநெல்வேலியிலுள்ள வீட்டில் முதல் கட்டமாக bag தயாரிப்பதும், அடுத்த கட்டமாக காரைக்கால் பசளை தயாரிக்கும் நிலையத்தில் உர பக்ரிக்கு தேவைக்கேற்ப 20 பேரை உள்வாங்கி தொழில் பயிற்சி வழங்கலாம். இதில் ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றுவதற்காக பத்திரிகை மூலமாக விளம்பரப்படுத்தலாம் எனத்தெரிவித்ததை தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/07**

திருமதி.சி.கௌசலா அவர்களின் பிரேரணைக்கமைவாக எம்மால் தொழில் முயற்சிக்கான தையல் பயிற்சி வழங்கப்படுகின்ற 40 யுவதிகளை வைத்து சபைக்குச் சொந்தமான திருநெல்வேலியிலுள்ள வீட்டில் முதல் கட்டமாக bag தயாரிப்பதும், அடுத்த கட்டமாக காரைக்கால் பசளை தயாரிக்கும் நிலையத்தில் உர பக்ரிக்கு தேவைக்கேற்ப 20 பேரை உள்வாங்கி தொழில் பயிற்சி ஊடாக தொழில்பேட்டை ஆரம்பிப்பதெனவும் அதனை பத்திரிகை வாயிலாக விளம்பரப்படுத்துவதெனவும் கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஶ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து உபகுழுக்களின் சிபார்சிற்கான சபை அனுமதி பெறலில் 2021.12.28 ஆம் திகதிய கீழ்வரும் சந்தைக்குழு சிபார்சுகள் காட்சிப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 11.01.2022/08**

திருநெல்வேலிச் சந்தை பிரதான கட்டடத்தில் பதிவின்றி வியாபாரம் செய்பவர்களுக்கு அதே இடத்தை வழங்கி பதிவு செய்தல் கட்டணம் 5000/= அறவிடுவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஶ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/09**

கீரைக்கடைப் பகுதியில் வியாபாரம் செய்பவர்களை அவர்களின் சம்மதத்தின் அடிப்படையில் அதே இடத்தை வழங்கி பதிவு செய்தல் கட்டணம் 5000/= அறவிடுவதெனவும், குறித்த வியாபாரிகளின் சம்மதக்கடிதம் பெற்று கோவைப்படுத்துவதெனவும் கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஶ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/10**
குளுக்கலில் தெரிவானோருக்கு கீரைக்கடைப் பகுதியில் இருந்து புதிய இடங்களை நிரப்பிச் செல்வதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/11**
வராத இடங்களுக்கு மஞ்சள் கோடு அடித்து வைப்பதுடன் குறித்த நபருக்கு மீண்டும் அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட பின்னரே அவ் இடத்தை வழங்குவதெனவும், தொடர்ச்சியாக வருகை தராதவிடத்து சபைத் தீர்மானத்துடன் புதியவர்களுக்கு அவ்விடத்தை வழங்க நடவடிக்கை எடுப்பதெனவும் கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/12**
கடமையினை செய்ய விடாது அவதூறாக செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/13**
2022.01.01 ஆம் திகதி முதல் புதிய இடம் வழங்குதலும் வழங்கப்பட்ட இடங்கள் கைமாற்றப்படுகின்றனவா என்பன தொடர்பாக தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்துவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து டிசம்பர் மாதக் கொடுப்பனவுகள் காட்சிப்படுத்தப்பட்டு சபையின் தழுவு அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/14**
டிசம்பர் மாதம் கீழ்வரும் கொடுப்பனவுகளுக்கு சபை தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| S.No | Date | Cash Book 162-1001-00000-920 Details - December 2021 | | Cash | XE |
|---|---|---|---|---|---|
| G/01 | 7 | பொது முகாமையாளர் ப நோ கூ ச | வெளிவாரித் தொழிலாளர் கொடுப்பனவு | 607,692.00 | |
| G/02 | | கிளீன் வெல் | சுத்திகரிப்பு சேவை | 286,196.82 | |
| G/03 | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசிக் கட்டணம் | 489.19 | |
| G/04 | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசிக் கட்டணம் | 489.19 | |
| G/05 | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசிக் கட்டணம் | 1,100.11 | |
| | | | | **895,967.31** | - |
| G/06 | 13 | கே ஜெயப்பிரகாஸ் | வாகன வாடகை | 62,500.00 | |
| | | | | **62,500.00** | - |
| | | | | **895,967.31** | - |
| | | | | **958,467.31** | - |
| G/07 | 15 | வளர்மதி கடைச்சல் வேலை | வாகன திருத்தம் | 3,500.00 | |
| G/08 | | வளர்மதி கடைச்சல் வேலை | வாகன திருத்தம் | 1,100.00 | |
| G/09 | | வளர்மதி கடைச்சல் வேலை | வாகன திருத்தம் | 1,600.00 | |
| G/10 | | கே பாலசுப்பிரமணியம் | வாகன சுத்திகரிப்பு | 16,630.00 | |
| G/11 | | கே பாலசுப்பிரமணியம் | வாகன சுத்திகரிப்பு | 5,120.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G/12 | | சூரியா ஹாட்வெயார் | வீதி விளக்கு | 17,540.00 | |
| G/13 | | என் செல்வராஜா | புத்தகங்கள் | 5,580.00 | |
| G/14 | | எஸ் சிவராஜா | புத்தகங்கள் | 1,188.00 | |
| G/15 | | எச் எல் எம் நிசார் | புத்தகங்கள் | 3,537.00 | |
| G/16 | | ஆர் சிறீபாஸ்க்கரன் | புத்தகங்கள் | 1,620.00 | |
| G/17 | | கே கிருபாகரன் | புத்தகங்கள் | 200.00 | |
| G/18 | | பதிவாளர் நாயகம் பத்தரமுல்லை | முத்திரைக்கட்டண விபரம் உறுதிப்படுத்தல் கட்டணம் | 300.00 | |
| G/19 | | பொது முகாமையாளர் ப நோ கூ ச | சுத்திகரிப்பு பொருட்கள் கொள்வனவு | 15,000.00 | |
| G/20 | | பொது முகாமையாளர் ப நோ கூ ச | எரிபொருள் | 243,627.70 | |
| G/21 | | எஸ் எம் இஞ்சினியர்ஸ் | கேள்வி வைப்பு | 32,500.00 | |
| G/22 | | குரு இஞ்சினியர்ஸ் | கேள்வி வைப்பு | 32,500.00 | |
| G/23 | | எஸ் டி இஞ்சினியர்ஸ் | கேள்வி வைப்பு | 32,500.00 | |
| G/24 | | ஸ்ரார் அட்வெடிசிங் | விளம்பரப் பலகை | 5,900.00 | |
| G/25 | | ஸ்ரார் அட்வெடிசிங் | கொரோனா ஒழிப்பு ஸ்ரிக்கர் | 5,750.00 | |
| G/26 | | ஸ்ரார் அட்வெடிசிங் | அழைப்பு நிலைய ஸ்ரிக்கர் | 24,710.00 | |
| G/27 | | கஜமுகன் ஹாட்வெயார் | திரு சந்தை கொரோனா தடுப்புகான பொருட் கொள்வனவு | 4,400.00 | |
| G/28 | | கே ஜெகதீசன் | வாகன திருத்தம் | 3,250.00 | |
| G/29 | | கே ஜெகதீசன் | பாதுகாப்பு அங்கி கொள்வனவு | 1,500.00 | |
| G/30 | | கே ஜெகதீசன் | நீர் இறைக்கும் இயந்திர திருத்தம் | 2,350.00 | |
| G/31 | | என் லோகப்பிரகாஸ் | மரம் வெட்டும் அரிவாள் திருத்தம் | 6,000.00 | |
| G/32 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 7,500.00 | |
| G/33 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 8,400.00 | |
| G/34 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 6,375.00 | |
| G/35 | | நியூ உதயன் | விளம்பரம் | 16,560.00 | |
| G/36 | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | வீதி விளக்கு | 77,500.00 | |
| G/37 | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | அழைப்பு மணி கொள்வனவு | 1,100.00 | |
| G/38 | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | மின் விசிறி கொள்வனவு | 4,500.00 | |
| G/39 | | பணிப்பாளர் ஓய்வூதிய திணைக்களம் | ஓய்வூதிய பங்களிப்பு | 28,373.97 | |
| G/40 | | சந்திரா பாதுகாப்பு சேவை | பாதுகாப்பு சேவைக் கொடுப்பனவு | 132,734.00 | |
| G/41 | | குளொபல் ஒவ்வீஸ் சப்ளையர்ஸ் | கணினிக்கான மவுஸ் கொள்வனவு | 2,450.00 | |
| G/42 | | அ சுஜந்தன் | திரு சந்தை தராசு பற்றறி மாற்றம் | 1,800.00 | |
| G/43 | | அ சுஜந்தன் | கொக்குவில் சந்தை வாசல் கேற் திருத்தம் | 2,400.00 | |
| G/44 | | ஜெயநாதன் அபி வெல்டிங் வேக்ஸ் | கொக்குவில் சந்தை வாசல் கேற் திருத்தம் | 4,500.00 | |
| G/45 | | ரி சுவேந்திரபோய் | வாகன திருத்தம் | 1,700.00 | |
| G/46 | | எஸ் நடேசு | மயானக் கொடுப்பனவு | 600.00 | |
| G/47 | | எஸ் நடேசு | மயானக் கொடுப்பனவு | 600.00 | |
| G/48 | | க சேனாதிராசா | மயானக் கொடுப்பனவு | 1,800.00 | |
| G/49 | | க சேனாதிராசா | மயானக் கொடுப்பனவு | 1,000.00 | |
| G/50 | | ஜே செசிகுமார் மற்றும் ஏனையோர் | மேலதிக நேரம் | 145,194.30 | |
| G/51 | | கஜமுகன் ஹாட்வெயார் | 7.5 மீற்றர் அளவு கோல் கொள்வனவு | 4,200.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G/52 | | சிற்றி ஹாட்வெயார் | 50 மீற்றர் அளவு கோல் கொள்வனவு | 3,500.00 | |
| G/53 | | நவரட்ணம் தச்சு வேலை | அலுமாரி கொள்வனவு | 68,400.00 | |
| G/54 | | கே சட்டநாதன் | புத்தகங்கள் | 1,350.00 | |
| G/55 | | ஏசியன் மீடியா | புத்தகங்கள் | 16,125.00 | |
| G/56 | | அவன் ஸ்மாட் | வாகன திருத்தம் | 18,899.82 | |
| G/57 | | கேபி இஞ்சினியரிங் | பிடாரி அம்மன் வீதி வாய்க்கால் | 2,026,975.25 | 47,292.48 |
| | | | | **3,052,440.04** | **47,292.48** |
| | | | | **958,467.31** | **-** |
| | | | | **4,010,907.35** | **47,292.48** |
| G/58 | 20 | குணபாலா வெல்டிங் வேக்ஸ் | வாகன திருத்தம் | 140,165.00 | |
| G/59 | | நியூ ஸ்ரக்சரல் சிவில் கென்ஸ்ரக்சன் | பிடிபணம் | 36,122.13 | |
| | | | | **176,287.13** | **-** |
| | | | | **4,010,907.35** | **47,292.48** |
| | | | | **4,187,194.48** | **47,292.48** |
| G/60 | 21 | செயலாளர் பி ச நல்லூர் | பண்டிகை முற்பணம் | 110,000.00 | |
| G/61 | | பிரதம கணக்காளர்இலங்கை புகையிரதத் திணைக்களம் | புகையிரத ஆணைச்சீட்டு | 3,000.00 | |
| G/62 | | வளர்மதி கடைச்சல் வேலை | ரக்டர் நிழல் குடை | 53,000.00 | |
| G/63 | | பொது முகாமையாளர் ப நோ கூ ச | திரு சந்தை திருத்த வேலை பொருட்கள் | 69,200.00 | |
| G/64 | | கோல்டன் ஈகிள் | வாகன சாரதி கொடுப்பனவு | 73,710.00 | |
| | | | | **308,910.00** | **-** |
| | | | | **4,187,194.48** | **47,292.48** |
| | | | | **4,496,104.48** | **47,292.48** |
| G/65 | 27 | எஸ் டி இஞ்சினியரிங் | பிடிபணம் | 61,714.03 | |
| G/66 | | லிங்கம்திரி பிறைவேற் லிமிடட் | பிடிபணம் | 87,929.90 | |
| G/67 | | கேபி இஞ்சினியரிங் | பிடிபணம் | 32,500.00 | |
| G/68 | | கொக்குவில் பொற்பதி சசநி | பிடிபணம் | 29,269.16 | |
| G/69 | | செயலாளர் பிச நல்லூர் | சில்லறைக் காசு மீளளிப்பு | 8,110.00 | |
| G/70 | | நோத் லிங் | கலாமன்ன சசநி போட்டோ கொப்பி இயந்திரத்திற்கான மேலதிக பணம் வைப்பு கணக்கிலிருந்து மீளளிப்பு | 5,700.00 | |
| G/71 | | கிளீன் வெல் | சுத்திகரிப்பு சேவை | 269,997.00 | |
| G/72 | | டயலொக் | ரவுட்டர் கொடுப்பனவு | 991.80 | |
| G/73 | | மெற்றோ பொலிடன் | ரோனர் கொள்வனவு | 119,286.00 | |
| G/74 | | மெற்றோ பொலிடன் | போட்டோ கொப்பியர் திருத்தம் | 39,148.51 | |
| G/75 | | லேக்ஹவுஸ் | விளம்பரம் | 186,691.50 | |
| G/76 | | வலம்புரி | விளம்பரம் | 2,100.00 | |
| G/77 | | வலம்புரி | விளம்பரம் | 24,000.00 | |
| G/78 | | வலம்புரி | விளம்பரம் | 24,000.00 | |
| G/79 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 10,125.00 | |
| G/80 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 1,800.00 | |
| G/81 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 19,500.00 | |
| G/82 | | எஸ் சுதாகரன் | மேலதிக நேரம் | 7,474.77 | |
| G/83 | | கே ஜெகதீசன் | விடுமுறைநாள் கொடுப்பனவு | 4,873.30 | |
| G/84 | | இலங்கை மின்சாரசபை | மின் கட்டணம் | 31,005.70 | |
| G/85 | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசிச் கட்டணம் | 14,746.05 | |
| G/86 | | செயலாளர் பிச நல்லூர் | எல்டிஎஸ்பி முற்பண சீராக்கம் | | 9,700.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G/87 | | பதிவாளர் நாயகம் பத்தரமுல்லை | முத்திரைக்கட்டண விபரம் உறுதிப்படுத்தல் கட்டணம் | 100.00 | |
| G/88 | | யாழ் மாவட்ட ஆயர்வேத மருந்துகள் உற்பத்தி விற்பனை | ஆயர்வேத மருந்து | 27,725.00 | |
| G/89 | | என் பிலாஸ் சுப்பர் டிடர்ஜன் | கேள்வி வைப்பு | 10,000.00 | |
| | | | | **1,018,787.72** | **9,700.00** |
| | | | | **4,496,104.48** | **47,292.48** |
| | | | | **5,514,892.20** | **56,992.48** |
| G/90 | 29 | ஸ்ரீ சிவில் கென்ஸ்ரக்சன் | பிடாரி அம்மன் கோவில் வீதி வாய்க்கால் 01 | 415,419.26 | |
| G/91 | | எஸ்ரிஎஸ் சிவில் இஞ்சினியரிங் | பிடாரி அம்மன் கோவில் வீதி வாய்க்கால் 02 | 586,738.61 | 27,398.79 |
| G/92 | | பி விசாகன் | பத்திரிகை | 7,340.00 | |
| G/93 | | பி விசாகன் | பத்திரிகை | 7,810.00 | |
| G/94 | | பி விசாகன் | பத்திரிகை | 1,920.00 | |
| G/95 | | பி விசாகன் | பத்திரிகை | 7,730.00 | |
| G/96 | | பி விசாகன் | பத்திரிகை | 6,490.00 | |
| G/97 | | பி விசாகன் | பத்திரிகை | 7,130.00 | |
| G/98 | | பி விசாகன் | பத்திரிகை | 5,670.00 | |
| G/99 | | எஸ் ரூபசிங்கம் | புத்தகம் | 17,550.00 | |
| G/100 | | பொது முகாமையாளர் இலங்கை மின்சாரசபை | வீதி விளக்கு பொருத்துவதற்கான கொடுப்பனவு | 1,201,610.30 | |
| G/101 | | ரி சுதர்மன் | புத்தகம் | 2,700.00 | |
| G/102 | | எஸ் சண்முகதாசன் | புத்தகம் | 1,350.00 | |
| G/103 | | கே கிருபாகரன் | புத்தகம் | 400.00 | |
| G/104 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 21,150.00 | |
| G/105 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 16,725.00 | |
| G/106 | | வலம்புரி | விளம்பரம் | 1,350.00 | |
| G/107 | | எஸ் ஐங்கரன் | இடர்கடன் | 250,000.00 | |
| G/108 | | கே நாமகள் | இடர்கடன் | 250,000.00 | |
| G/109 | | எஸ் நடனகுமாரன் | சஞ்சிகை | 3,720.00 | |
| G/110 | | எஸ் நடனகுமாரன் | சஞ்சிகை | 3,720.00 | |
| G/111 | | வளர்மதி கடைச்சல் வேலை | வாகன திருத்தம் | 9,850.00 | |
| G/112 | | வளர்மதி கடைச்சல் வேலை | வாகன திருத்தம் | 7,400.00 | |
| G/113 | | கேபிஎஸ் இஞ்சினியரிங் | பிடிபணம் | 101,491.27 | |
| G/114 | | லிங்கம்திரி | பிடிபணம் | 51,254.26 | |
| G/115 | | நேசன் பில்டேஸ் | பிடிபணம் | 34,745.10 | |
| G/116 | | செயலாளர் பி ச நல்லூர் | திரு சந்தை 1/3 குத்தகை வருமானமாக மாற்றல் | | 11,316,743.55 |
| G/117 | | செயலாளர் பி ச நல்லூர் | திரு சந்தை ஆட்டிறச்சி கடை 1/3 குத்தகை வருமானமாக மாற்றல் | | 238,978.96 |
| G/118 | | நவரட்ணம் தளபாடங்கள் மற்றும் தச்சு வேலை | தளபாட கொள்வனவு | 301,600.00 | |
| G/119 | | நவரட்ணம் தளபாடங்கள் மற்றும் தச்சு வேலை | தளபாட கொள்வனவு | 158,200.00 | |
| G/120 | | நளின் இன்போமேசன் | கணினி பாகம் பொள்வனவு | 15,000.00 | |
| G/121 | | சிங்கர் சிறீலங்கா | வளி சீராக்கி திருத்தம் | 3,955.00 | |
| G/122 | | எஸ் நிறோசன் | குசன் இருக்கைகள் சுத்தம் செய்வதற்கான பொருட்கள் கொள்வனவு | 1,150.00 | |
| G/123 | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | ரிவி ஸ்ராண்ட் | 4,400.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G/124 | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | மின் குமிழ் தாங்கி | 21,760.00 | |
| G/125 | | எஸ் அகல்ராஜ் | மோட்டர் வைண்டிங் செய்தமை | 14,950.00 | |
| G/126 | | குளொபல் ஒவ்வீஸ் சப்ளையர்ஸ் | காகிதாதிகள் | 43,450.00 | |
| G/127 | | கே பரணீதரன் | புத்தகம் | 16,905.00 | |
| | | | | **3,602,633.80** | **11,583,121.30** |
| | | | | **5,514,892.20** | **56,992.48** |
| | | | | **9,117,526.00** | **11,640,113.78** |
| G/128 | 30 | செயலாளர் பிச நல்லூர் | நிலையான வைப்பு | 18,000,000.00 | |
| G/129 | | யாழ் மாவட்ட ஆயர்வேத மருந்துகள் உற்பத்தி விற்பனை | மருந்துக் கொள்வனவு | 32,595.00 | |
| G/130 | | செயலாளர் பிச நல்லூர் | கணக்குகளிற்கிடையிலான மாற்றம் | 450.00 | |
| G/131 | | எஸ் சுதர்ஜன் மற்றும் ஏனையோர் | பயணக்கொடுப்பனவு | 118,217.69 | |
| G/132 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 8,250.00 | |
| G/133 | | வலம்புரி | விளம்பரம் | 10,125.00 | |
| G/134 | | எஸ் நடனகுமாரன் | சஞ்சிகை | 7,700.00 | |
| G/135 | | எஸ் நடனகுமாரன் | சஞ்சிகை | 3,720.00 | |
| G/136 | | கே ஜெகதீசன் | விடுமுறைநாள் கொடுப்பனவு | 4,873.33 | |
| G/137 | | கே ஜெகதீசன் | விடுமுறைநாள் கொடுப்பனவு | 4,873.33 | |
| G/138 | | எஸ்டி இஞ்சினியரிங் | கேகேஎஸ் வீதி வாய்க்கால் கிளீனிங் | 465,428.16 | 24,496.21 |
| G/139 | | எஸ்டி இஞ்சினியரிங் | வட்டாரம் 07 வீதி வேலை | 58,752.84 | 2,580.70 |
| G/140 | | குரு இஞ்சினியர்ஸ் | கலைவானி வீதி வாய்க்கால் | 337,060.00 | 17,740.00 |
| G/141 | | எஸ்எம் சிவில் இஞ்சினியரிங் | சம்பியன் வீதி வாய்க்கால் துப்புரவு | 403,792.75 | 21,252.25 |
| G/142 | | கேபி இஞ்சினியரிங் | கோண்டாவில் இருபாலை வீதி வாய்க்கால் துப்புரவு | 636,919.20 | 33,522.06 |
| G/143 | | எஸ்பி இஞ்சினியரிங் | பொற்பதி பிள்ளையார் கோவில் கொக்குவில் சந்தி துப்புரவு | 1,430,073.00 | 75,267.00 |
| | | | | **21,522,830.30** | **174,858.22** |
| | | | | **9,117,526.00** | **11,640,113.78** |
| | | | | **30,640,356.30** | **11,814,972.00** |
| G/144 | 31 | செயலாளர் பிச நல்லூர் | நிலையான வைப்பு | 15,000,000.00 | |
| G/145 | | வளர்மதி கடைச்சல் வேலை | வாகன திருத்தம் | 12,000.00 | |
| G/146 | | பி விசாகன் | பத்திரிகை | 6,100.00 | |
| G/147 | | தர்ணிகா மோட்டோஸ் | வாகன ஒயில் கொள்வனவு | 10,500.00 | |
| G/148 | | லங்கா அசோக் லேடண் | வாகன ஒயில் கொள்வனவு | 31,492.69 | |
| G/149 | | பி மயூரன் மற்றும் ஏனையோர் | திட்டமிடல் குழு கொடுப்பனவு | 29,250.00 | |
| G/150 | | கே கலைமகள் | இடர்கடன் | 167,188.00 | 82,812.00 |
| G/151 | | இலங்கை மின்சாரசபை | மின் கட்டணம் | 72,520.15 | |
| G/152 | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசிச் கட்டணம் | 8,895.20 | |
| G/153 | | ஏ செந்தூர்செல்வன் | ஆதன வரி தரகு | 17,548.52 | |
| G/154 | | குரு பிறிண்டர்ஸ் | பாதிட்டு புத்தகம் கட்டியமை | 3,200.00 | |
| G/155 | | குரு பிறிண்டர்ஸ் | பாதிட்டு புத்தகம் கட்டியமை | 4,000.00 | |
| G/156 | | குரு பிறிண்டர்ஸ் | பாதிட்டு புத்தகம் கட்டியமை | 4,000.00 | |
| G/157 | | எஸ் சோபிதன் | சட்டவாளர் கொடுப்பனவு | 45,000.00 | |
| G/158 | | ஜே ஜசிந்தா | கே படிவம் எழுதிய கொடுப்பனவு | 4,248.00 | |
| G/159 | | ஆர் தனுசுயா | கே படிவம் எழுதிய கொடுப்பனவு | 2,200.50 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G/160 | | பி செந்தாமரையாசனி | கே படிவம் எழுதிய கொடுப்பனவு | 2,346.00 | |
| G/161 | | எஸ் தயாளன் | விடுமுறைநாள் கொடுப்பனவு | 71,626.50 | |
| G/162 | | செயலாளர் பிச நல்லூர் | 1/3 கடை வாடகை | | 13,800.00 |
| G/163 | | செயலாளர் பிச நல்லூர் | சில்லறைக் காசு முற்பண சீராக்கம் | | 4,950.00 |
| G/164 | | செயலாளர் பிச நல்லூர் | சில்லறைக் காசு முற்பண சீராக்கம் | | 5,000.00 |
| G/165 | | பி மயூரன் மற்றும் ஏனையோர் | பெறுகை குழு தொழில்நுட்பக குழு கொடுப்பனவு | 135,000.00 | |
| G/166 | | எஸ் கலைமகள் மற்றும் ஏனையோர் | மேலதிக நேரம் | 33,486.95 | |
| G/167 | | ஆர் ஆர் ரொசிந்தன் மற்றும் ஏனையோர் | விடுமுறைநாள் கொடுப்பனவு | 52,899.46 | |
| G/168 | | செயலாளர் பிச நல்லூர் | சில்லறைக் கடனாளிகள் கணக்கிலிருந்து திரண்டநிதிக்கு மாற்றம் | | 234,252.00 |
| G/169 | | பாரதி சசநி | திரு. சந்தி அழகுபடுத்தல் | 71,415.00 | 7,935.00 |
| G/170 | | உதய ஒளி சசநி | செம்மணி வீதி அருகிலுள்ள பனை மரம் கங்குகள் வெட்டிய கொடுப்பனவு | 122,500.00 | |
| G/171 | | ஆ அப்புத்துரை | சந்தை வைப்பு மீளளிப்பு | 99,715.92 | 8,911.70 |
| G/172 | | பி விசாகன் | பத்திரிகை | 4,920.00 | |
| G/173 | | எஸ் சுதாசன் | பூட்டுக் கொள்வனவு | 1,150.00 | |
| G/174 | | ஏ சுஜந்தன் | இலச்சினை பிறிண்ட் செய்தமை | 1,200.00 | |
| G/175 | | பொது முகாமையாளர் ப நோ கூ ச | எரிபொருள் | 275,145.30 | |
| G/176 | | பொது முகாமையாளர் ப நோ கூ ச | சுத்திகரிப்புப் பொருட்கள் | 43,500.00 | |
| G/177 | | தபால்மா அதிபர் | தபால் கட்டணம் | 39,216.00 | |
| G/178 | | கோல்டன் ஈகிள் | சாரதிக் கொடுப்பனவு | 83,265.00 | |
| G/179 | | கிளீன் வெல் | சுத்திகரிப்பு கொடுப்பனவு | 265,497.05 | |
| G/180 | | எஸ் சுதாகரன் | வாகன வரி | 5,980.00 | |
| G/181 | | வளர்மதி கடைச்சல் வேலை | வாகன திருத்தம் | 16,500.00 | |
| G/182 | | வி மயில்வாகனம் | அலுவலகம் இடமாற்றியமைக்கான செலவீனம் | 1,450.00 | |
| G/183 | | செயலாளர் பிச நல்லூர் | 1/3 சந்தை குத்தகை | | 1,087,359.67 |
| G/184 | | பொது முகாமையாளர் ப நோ கூ ச | வெளிவாரித் தொழிலாளர் கொடுப்பனவு | 589,536.00 | |
| G/185 | | எம் டினேஸ் மற்றும் ஏனையோர் | மேலதிக நேரம் | 9,169.65 | |
| G/186 | | ஆர் ஜெபடிலோஜினி மற்றும் ஏனையோர் | கே படிவம் எழுதிய கொடுப்பனவு | 35,343.00 | |
| G/187 | | ஜே எஸ்ரின் | இறைச்சிகடை குத்தகை மீளளிப்பு | 2,889.82 | |
| G/188 | | என் உதயகுமார் | இறைச்சிகடை குத்தகை மீளளிப்பு | 4,520.75 | |
| G/189 | | எஸ் நடேசு | மயானக் கொடுப்பனவு | 1,800.00 | |
| G/190 | | கே சேனாதிராசா | மயானக் கொடுப்பனவு | 1,200.00 | |
| G/191 | | செயலாளர் பிச நல்லூர் | சில்லறைக் காசேட்டு முற்பண சீராக்கம் | | 9,930.00 |
| G/192 | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசிக் கட்டணம் சில்லறைக் கடனாளிகள் கணக்கிற்கு மாற்றம் | | 9,000.00 |
| G/193 | | இலங்கை மின்சாரசபை | மின் கட்டணம் சில்லறைக் கடனாளிகள் கணக்கிற்கு மாற்றம் | | 20,720.00 |
| G/194 | | எம் பகீரதன் மற்றும் ஏனையோர் | கே படிவம் வழங்கிய கொடுப்பனவு சில்லறைக் | | 63,605.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கடனாளிகள் கணக்கிற்கு மாற்றம் | | |
| G/195 | | செயலாளர் பிரதேசசபை நல்லூர் | வாழ்வாதாரம் புலமைப்பரிசில் பல்கலைக்கழக நன்கொடை சசநிலைய நன்கொடை | | 4,400,000.00 |
| G/196 | | பி விசாகன் மற்றும் ஏனையோர் | சில்லறைக் கடனாளிகள் கணக்கிற்கு மாற்றம் | | 47,980.00 |
| G/197 | | வி பிரதாபன் மற்றும் ஏனையோர் | மேலதிக நேரம் | | 12,533.01 |
| G/198 | | சந்திரா பாதுகாப்பு சேவை | | | 135,728.00 |
| G/199 | | கணக்காய்வாளர் நாயகம் அரச கணக்காய்வுத் திணைக்களம் | கணக்காய்வுக் கட்டணம் | | 100,000.00 |
| G/200 | | பணிப்பாளர் ஓய்வூதிய திணைக்களம் | ஓய்வூதிய பங்களிப்பு சில்லறைக் கடனாளிகள் கணக்கிற்கு மாற்றம் | | 28,373.97 |
| G/201 | | செயலாளர் பிச நல்லூர் மற்றும் ஏனையோர் | சில்லறைக் கடனாளிகள் கணக்கிற்கு மாற்றம் | | 76,989,273.93 |
| | | ரி கஜன் | விடுமுறைநாள் கொடுப்பனவு | 5,273.33 | |
| | | ரி கஜன் | பயணக்கொடுப்பனவு | 540.00 | |
| | | எஸ்ரிஎஸ் சிவில் இஞ்சினியரிங் | கொக்குவில் உப அலுவலக சுற்றுமதில் | 611,790.02 | 32,199.48 |
| | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | திரு சந்தை நீர்குழாய் திருத்தம் | 975.00 | |
| | | | | **18,007,993.81** | **83,294,363.76** |
| | | | | **30,640,356.30** | **11,814,972.00** |
| | | | | **48,648,350.11** | **95,109,335.76** |

| Cash Book 1095945 -December 2021 | | | | |
|---|---|---|---|---|
| **SV.N** | **Date** | **Details** | **Cash** | **XE** |
| SA/01 | 20 | முகாமையாளர், இலங்கை வங்கி | 148,640.00 | |
| | | முகாமையாளர்,கொமர்சியல் வங்கி | 97,750.00 | |
| | | முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி | 14,780.00 | |
| | | முகாமையாளர்,தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலி | 13,750.00 | |
| | | முகாமையாளர் மக்கள் வங்கி திருநெல்வேலி | 14,000.00 | |
| | | நலன்புரிச் சங்கம் ந பி ச | 4,230.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 14,850.00 | |
| | | ஐக்கிய தேசிய கட்சி | 1,000.00 | |
| | | இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 4,000.00 | |
| | | தமிழ் தேசிய மக்கள் முன்னணி | 2,000.00 | |
| | | | **315,000.00** | **-** |
| SA/02 | 22 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 4,533,124.39 | |
| | | செயலாளர் கணக்காளர் ஓய்வூதியத் திணைக்களம் | 237,632.10 | |
| | | தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 26,675.00 | |
| | | சிலிங்கோ இன்சுரன்ஸ் | 3,738.00 | |
| | | எச் என் பி அசுரன்ஸ் | 2,171.00 | |
| | | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் | 5,770.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 535,256.00 | 9,573.39 |
| | | | **5,344,366.49** | **9,573.39** |
| | | | **315,000.00** | **-** |
| | | | **5,659,366.49** | **9,573.39** |
| SA/3 | 30 | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 12,000,000.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | **12,000,000.00** | **-** |
| | | | **5,659,366.49** | **9,573.39** |
| | | | **17,659,366.49** | **9,573.39** |
| SA/4 | 31 | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 10,000,000.00 | |
| | | | **10,000,000.00** | **-** |
| | | | **17,659,366.49** | **9,573.39** |
| | | | **27,659,366.49** | **9,573.39** |

## Cash Book 6954633 -December 2021

| S.No | Date | Details | Cash | XE |
|---|---|---|---|---|
| EN/1 | 22 | ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பணம் கழிவகற்றல் ரோக்கன் | 45,000.00 | |
| | | | **45,000.00** | **-** |
| EN/2 | 27 | பணிப்பாளர் மத்திய சுற்றாடல் அதிகாரசபை | 15,075.00 | |
| EN/3 | | ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பணம் கழிவகற்றல் ரோக்கன் | 30,000.00 | |
| EN/4 | | கே நேசகுமார் கலி பௌசர் | 18,000.00 | |
| EN/5 | | எஸ் சிவானுஜன் விடுமுறைநாள் கொடுப்பனவு | 5,709.75 | |
| EN/6 | | கே நேசகுமார் கலி பௌசர் | 18,000.00 | |
| | | | 86,784.75 | |
| | | | 45,000.00 | |
| | | | 131,784.75 | |
| EN/7 | 31 | ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பணம் கழிவகற்றல் ரோக்கன் | 30,000.00 | |
| EN/8 | | கே நேசகுமார் கலி பௌசர் | 6,000.00 | |
| EN/9 | | எஸ் சிவானுஜன் விடுமுறைநாள் கொடுப்பனவு | 5,709.75 | |
| | | | **41,709.75** | |
| | | | **131,784.75** | |
| | | | **173,494.50** | |

நிகழ்ச்சி நிரலில் அடுத்து டிசம்பர் மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கையினை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/15**

டிசம்பர் மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கையினை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து டிசம்பர் மாத வருமான செலவு அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபையின் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/16**

டிசம்பர் மாத வருமான செலவு அறிக்கை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து 2022ம் ஆண்டுக்கான கொடுப்பனவுகளுக்கு பொதுத் தீர்மானம் பெறுவதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**தீர்மானம் 11.01.2022/17**
2022ம் ஆண்டிற்கான எமது வரவுசெலவுத்திட்டத்திற்கு அமைவாக சபையின் 1வது பொதுக்கூட்டம் நடத்தப்படும் இன்றைய திகதி முதல் சபையின் நிரந்தர நாட்சம்பள, வெளிவாரியான அடிப்படையில் உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்கள், படிகள், நிர்வாக கடமைகள் தொடர்பாக அவர்களால் மேற்கொள்ளப்படும் பிரயாணப்படிகள், அனுமதிக்கப்பட்ட விடுமுறைக் கொடுப்பனவுகள் மேலதிக நேரவேலைக்கொடுப்பனவுகள், நடுக்கட்டல் உத்தியோகத்தர் கொடுப்பனவுகள், புகையிரத ஆணைச்சீட்டு கொடுப்பனவு, பண்டிகை முற்பணக்கொடுப்பனவு, பதவியினர் கடன்கள், மற்றும் சில்லறைக்காசு கொடுப்பனவு மீளளித்தல், தலைமை அலுவலகம், கொக்குவில், நல்லூர், கோண்டாவில் நூலகங்களுக்கு பத்திரிகை. மற்றும் சஞ்சிகை கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவு, அலுவலகங்கள், நூலகங்கள், சந்தைகள் ஆகியவற்றிற்கான மின்கட்டணங்கள், வாடகைகள், தொலைபேசிக்கட்டணங்கள், பத்திரிகை விளம்பரக்கொடுப்பனவுகள், முத்திரைக் கொடுப்பனவு, வைப்பு மீளளிப்பு, உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் இளைப்பாறு நயங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவு மற்றும் சபையின் பாவனையிலுள்ள வாகனங்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு ஆகியவற்றை வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 09வது விடயம் தவிசாளர் கொடுப்பனவுக்கான அதியுச்ச எல்லை வரையறை செய்தல். குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/18**
தவிசாளருக்கான கொள்வனவு மற்றும் கொடுப்பனவுக்கான அதி உச்ச எல்லை ரூபா 500,000.00 என்பதை சபை அங்கீகாரிப்பதுடன், அக்கொடுப்பனவிற்கான தழுவு அனுமதியை தொடர்ந்து வரும் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 10வது விடயம் 2022ம் ஆண்டுக்கான உப குழுக்கள் தெரிவு செய்தல். குறித்த விடயம் சபையில் விரிவாக ஆராயப்பட்டு சென்ற 2021ம் ஆண்டு ஒரு குழுவில் அங்கம் வகித்தவர்களை மீண்டும் அக்குழுவுக்கு தெரிவு செய்வதில்லை என்பதாக தீர்மானிக்கப்பட்டு கீழ்வருமாறு குழுக்களுக்கு கௌரவ உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

**தீர்மானம் 11.01.2022/19**
சபையின் நிதி மற்றும் கொள்கை உருவாக்கல் குழுவிற்கான உறுப்பினர்கள் கீழ்வருமாறு தெரிவுசெய்யப்பட்டு சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

01. திரு.பத்மநாதன் மயூரன்
    முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா
    வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன்
02. திரு.சுப்பிரமணியம் விஜயகுமாரன்
    முன்மொழிந்தவர் கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம்
    வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன்
03. திரு.கபிரியேல்பிள்ளை திருஞானராசா
    முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா
    வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திருவ.ஸ்ரீகணேசா
04. திரு.குமாரசாமி மதுசுதன்
    முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம்

வழிமொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திரு.தெ.கிரிதரன்

05. செல்வி.குலேந்திரன் பிரிந்தா
முன்மொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திருமதி.சு.வாசுகி
வழிமொழிந்தவா்: கௌரவ உபதவிசாளா் திரு.இ.ஜெயகரன்

**தீா்மானம் 11.01.2022/20**

நிதிக்குழு மற்றும் பெறுகைக்குழு தலைவாராக கௌரவ தவிசாளா் அவா்களே தலைவராக செயற்படுவதென கௌரவ உபதவிசாளா் திரு.இ.ஜெயகரன் அவா்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினா் திரு.கு.மதுசுதன் அவா்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உப குழு தெரிவில் அடுத்து வீடமைப்பு மற்றும் திட்டமிடல் குழு உறுப்பினா்களையும் அதன் தலைவரையும் சபையால் கீழ்வருமாறு தெரிவு செய்து தீா்மானம் மேற்கொள்ளப்பட்டது.

**தீா்மானம் 11.01.2022/21**

சபையின் வீடமைப்பு மற்றும் திட்டமிடல் குழு உறுப்பினா்கள் கீழ்வருமாறு தெரிவுசெய்யப்பட்டு சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

01. திரு.வல்லிபுரம் ஸ்ரீகணேசா
முன்மொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திரு.செ.சிவலோசன்
வழிமொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திரு.தெ.கிரிதரன்

02. செல்வி.சிந்துஜா விஜயகுமாா்
முன்மொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திருமதி.ர.கோமதி
வழிமொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திரு.செ.சிவலோசன்

03. திரு.வஸ்ரியாம்பிள்ளை சிறில்றூமன் விஜேந்திரன்
முன்மொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திரு.வ.ஸ்ரீகணேசா
வழிமொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திரு.தெ.கிரிதரன்

04. திருமதி.அகிலாண்டரூபி அழகேந்திரம்
முன்மொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திரு.இ.இராசலிங்கம்
வழிமொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திரு.வ.ஸ்ரீகணேசா

05. திரு.கந்தையா குகானந்தன்
முன்மொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திரு.வ.ஸ்ரீகணேசா
வழிமொழிந்தவா்: கௌரவ உறுப்பினா் திரு.தெ.கிரிதரன்

**தீா்மானம் 11.01.2022/22**

வீடமைப்புக்குழுவுக்கு தெரிவுசெய்யப்பட்ட கௌரவ உறுப்பினா்களில் கௌரவ உறுப்பினா் திரு. திரு.வல்லிபுரம் ஸ்ரீகணேசா அவா்களை வீடமைப்பு குழுவின் தலைவராக செயற்படுவதென கௌரவ உறுப்பினா் திரு.தெ.கிரிதரன் அவா்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினா் திரு.செ.சிவலோசன் அவா்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினா் திருமதி.சு.வாசுகி அவா்கள் பி.ப.3.20 மணியளவில் சபைக்கூட்டத்திலிருந்து வெளியேறினாா்.

உபகுழு தெரிவில் அடுத்து தொழில்நுட்ப குழு உறுப்பினா்களையும் அதன் தலைவரையும் சபையால் கீழ்வருமாறு தெரிவு செய்து தீா்மானம் மேற்கொள்ளப்பட்டது.

**தீா்மானம் 11.01.2022/23**

சபையின் தொழில்நுட்ப குழுவிற்கான உறுப்பினா்கள் கீழ்வருமாறு தெரிவுசெய்யப்பட்டு சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**01.** திரு.இராசையா இராசலிங்கம்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா

**02.** திருமதி.செல்லத்துரை .சச்சிதானந்ததேவி
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா

**03.** திரு.இராஜமனோகரன் ஜெயகரன்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினா திரு.தெ.கிரிதரன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா

**04.** திருமதி.கௌசலா சிவா
முன்மொழிந்தவர்: கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன

**05.** திரு.தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன்
வழிமொழிந்தவர்: கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன்

**தீர்மானம் 11.01.2022/24**
தொழில்நுட்பக்குழுவுக்கு தெரிவுசெய்யப்பட்ட கௌரவ உறுப்பினர்களில் திரு.இராசையா இராசலிங்கம் அவர்களை தொழில்நுட்பக்குழுவின் தலைவராக செயற்படுவதென கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உபகுழு தெரிவில் அடுத்து சுற்றாடல் வாழ்வசதி குழு உறுப்பினர்களையும் அதன் தலைவரையும் சபையால் கீழ்வருமாறு தெரிவு செய்து தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/25**
சபையின் சுற்றாடல் வாழ்வசதி குழுவிற்கான உறுப்பினர்கள் கீழ்வருமாறு தெரிவுசெய்யப்பட்டு சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**01.** திரு.கணேசு முருகையா
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா

02. திரு.தெய்வேந்திரம் கிரிதரன்
முன்மொழிந்தவர்: கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம்

**03.** திரு.செல்வநாயகம் சிவலோசன்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா

**04.** திருமதி.வாசுகி சுதாகர்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் செல்வி.கு.பிரிந்தா
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன்

05. திருமதி.கோமதி ரவிதாஸ்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா

**தீர்மானம் 11.01.2022/26**
சுற்றாடல் வாழ்வசதி குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்ட கௌரவ உறுப்பினர்களில் திரு.கணேசு முருகையா அவர்களை சுற்றாடல் வாழ்வசதி குழுவின் தலைவராக செயற்படுவதென கௌரவ உறுப்பினர்

திரு.கு.மதுசுன் அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் செல்வி.கு.பிரிந்தா அவர்கள் பி.ப.3.25 மணியளவில் சபைக்கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

உபகுழு தெரிவில் அடுத்து சந்தைக்குழு உறுப்பினர்களையும் அதன் தலைவரையும் சபையால் கீழ்வருமாறு தெரிவு செய்து தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/27**

சபையின் சந்தைக்குழு உறுப்பினர்கள் கீழ்வருமாறு தெரிவுசெய்யப்பட்டு சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

01. திருமதி.கோமதி ரவிதாஸ்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினா திரு.இ.இராசலிங்கம்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன்

02. திரு.தெய்வேந்திரம் கிரிதரன்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையர்

03. திரு.செல்வநாயகம் சிவலோசன்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா

04. திரு.இராஜமனோகரன் ஜெயகரன்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன்

05. திரு.பத்மநாதன் மயூரன்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா

**தீர்மானம் 11.01.2022/28**

சந்தைக்குழுவின் தலைவாராக கௌரவ தவிசாளர் அவர்களே செயற்படுவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உபகுழு தெரிவில் அடுத்து சனசமூகநிலையக்குழு உறுப்பினர்களையும் அதன் தலைவரையும் சபையால் கீழ்வருமாறு தெரிவு செய்து தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/29**

சபையின் சனசமூகநிலையக்குழு உறுப்பினர்கள் கீழ்வருமாறு தெரிவுசெய்யப்பட்டு சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

01. திரு.வல்லிபுரம் ஸ்ரீகணேசா
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன்

02. திரு.குமாரசாமி மதுசுதன்
முன்மொழிந்தவர்: கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம்

03. திரு. தெய்வெந்திரம் கிரிதரன
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா
வழிமொழிந்தவர்: கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன்

04. திரு.சுப்பிரமணியம் விஜயகுமாரன்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம்
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா

05. திரு. .இராஜமனோகரன் ஜெயகரன்
முன்மொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா
வழிமொழிந்தவர்: கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன்

**தீர்மானம் 11.01.2022/30**
சனசமூகநிலையக்குழுவின் தலைவாராக திரு.வ.ஸ்ரீகணேசா அவர்களை தெரிவு செய்வதாக கௌரவ உறுப்பினர் திருமதிசெ.சச்சிதானந்ததேவி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உபகுழு தெரிவில் அடுத்து பெண்கள் சிறுவர் குழு தெரிவு தொடர்பாக சபையில் விரிவாக ஆராயப்பட்டு இறுதியில் குறித்த குழுவிற்கு கௌரவ ஏழு பெண் உறுப்பினர்களையும் சிறுவர் குழுவிற்கு இரு ஆண் கௌரவ உறுப்பினர்களை தெரிவு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/31**
பெண்கள் மற்றும் சிறுவர் குழுவில் சபையிலுள்ள கீழ்வரும் ஏழு பெண் உறுப்பினர்களையும் அத்துடன் சிறுவர் குழுவிற்கு கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்களையும், கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்களையும் தெரிவு செய்வதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**01.** திருமதி.கௌசலா சிவா
**02.** திருமதி.வாசுகி சுதாகர்
**03.** திருமதி.கோமதி ரவிதாஸ்
**04.** திருமதி.செல்லத்துரை .சச்சிதானந்ததேவி
**05.** திருமதி.அகிலாண்டரூபி அழகேந்திரம்
**06.** செல்வி.சிந்துஜா விஜயகுமார்
**07.** செல்வி.குலேந்திரன் பிரிந்தா

**தீர்மானம் 11.01.2022/32**
பெண்கள் மற்றும் சிறுவர் குழு தலைவாராக திருமதி.சி.கௌசலா அவர்களை தெரிவு செய்வதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திரு.தா.தியாகமூர்த்தி அவர்கள் பி.ப.3.40 மணியளவில் சபைக்கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

அதனைத்தொடர்ந்து புதிதாக நியமிக்கக்கப்பட்ட குழு உறுப்பினர்களுக்கும் அதன் தலைவர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு அனைத்துக் குழுக்களும் வினைத்திறனாகச் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் கூறுகையில் சபைக்கு அவமதிப்பு செய்வதை தடைசெய்ய வேண்டும். கௌரவ சபையின் கௌரவத்தினை பேணும் முகமாக உள் வருவோரும் வெளிச் செல்வோரும் அனுமதி பெற்றுச் செல்வது சாலச்சிறந்தது. அத்துடன் உறுப்பினர் வருகையினை கருத்தில் கொள்ள வேண்டும். சபையின் வரவுகளில் வீழ்ச்சி காணப்படுகின்றது. ஏற்கனவே இவ்விடயம் சபையில் கலந்துரையாடப்பட்டு தீர்மானிக்கப்பட்டது. அதனையும் கருத்தில் கொண்டுதொடர்ந்தும் இவற்றை பின்பற்றுவதுடன் சபையின் அவமதிப்பு செயல்களை மேற்கொள்பவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது சிறந்தது. இது தொடர்பாக சபையினரின் கருத்துக்களை தெரிவிக்குமாறு கூறினார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு சபை என்றால் அதற்கு கௌரவம் வழங்கப்பட வேண்டும். தலைவர் என்று ஒருவர் இருக்கும் போது நாம் கூட்டத்திற்கு தாமதமாக வருகை தரும் போது கௌரவ தவிசாளர் அனுமதியுடன் வருகை தருதல் வேண்டும். வெளிச் செல்லும் போதும் உள்வரும் போதும் அனுமதி பெறப்படவேண்டும். அதனை எல்லோராலும் கடைப்பிடிக்க வேண்டும். கூட்டத்தின் இடையில் வெளியில் செல்வதாயின் கௌரவ தவிசாளர் அனுமதி பெற்று செல்வது தான் சபைக்கு கடந்த சபையிலும் காணப்பட்டது. அது சிறப்பானது. கூட்ட அழைப்பு கடிதம் கிடைக்கப்பெற்றால் இயன்றளவு அக்கூட்டத்திற்கு வருகை தர வேண்டும். தவிர்க்க முடியாத காரணம் எனில் அதனை எழுத்து மூலமாக அறிவிப்பது சிறந்தது எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் செல்வி.கு.பிரிந்தா அவர்கள் பி.ப.3.45 மணியளவில் வருகை தந்து உடன் வெளியேறினார்.

அதன்போது கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் கருத்துரைக்கையில் தவிசாளர் கூட்டத்தை நடத்திச் செல்கையில் உறுப்பினர் இருக்கையில் இருந்து எழுந்தால் கௌரவ தவிசாளரின் சிறு தலை அசைவுடன் வெளியில் சென்று வரலாம். இதில் நாம் மைக்கில் அறிவித்து தான் செல்ல வேண்டும் என்று இல்லை. எழுந்து நிற்கும் போது தவிசாளர் விழிப்பார். அந்த நேரம் அவரின் அனுமதியுடன் செல்லலாம் எனத் தெரிவித்தார்.

அதன்போது குறித்த விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் கௌரவ தவிசாளர் கூறுவது தான் சரியானது. எனத்தெரிவித்தார். கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் இதனை தான் தாம் சென்ற கூட்டத்திற்கு முதல் கூட்டத்தில் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார். கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா, கௌரவ உறுப்பினர் திரு.க. திருஞானராசா ஆகியோரால் சபைக்கூட்டத்தில் இருந்து வெளிச்செல்லும் போதும் வருகை தரும் போதும் சபையில் எவ்வாறு அனுமதி பெற்று வருவது என்பது தொடர்பாக தத்தமது கருத்துக்களை சபையில் தெரிவித்தனர். அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டது. அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் இன்றைய சபைக்கூட்டத்திற்கு சமூகமளித்திருக்கின்றோம். வெளியில் சென்று நேரத்தை கழித்துவிட்டு வருகை தருவதால் சபையில் நடைபெற்ற விடயம் என்வென்று தெரியாது பின்னர் அடுத்த கூட்டத்திற்கு வரும் போது சென்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்ன என்பது தெரிவதில்லை. அவ்விடயங்கள் இங்கு நிறைவாக நடைபெறுக்கின்றது. அதனை நாம் நிவர்த்தி செய்வதன் மூலம் இவ் ஒழுங்குபடுத்தலை கொண்டு வரவேண்டும் எனத் தெரிவித்தார். இதனை தமக்காக கேட்கவில்லை. இது தவிசாளருக்குரிய கௌரவ சபைக்குரிய கௌரவம். இதனை தற்போது பின்பற்றினால் வரும் காலத்திலும் தொடர்ச்சியாக நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் குறிப்பிடுகையில் அண்மையில் மாநகர சபையிலிருந்து வருகை தந்த உறுப்பினர் கூட குறித்த விடயத்தை சுட்டிக்காட்டி உங்கள் சபையில் இப்படி நடக்கின்றது. ஆனால் மாநகர சபையில் இவ்வாறு இல்லை எனக் குறிப்பிட்டிருந்தார். சென்ற சபைக்கூட்டத்தில் ஏனையவையில் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தேன் எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தாம் தாமதமாக கூட்டத்திற்கு வருகை தரும் போது கௌரவ தவிசாளர் அவர்களை நோக்கி அவர் தலையசைத்து அனுமதி வழங்கிய பின்னரே சென்று அமர்வதாகவும் கூட்டத்தின் இடையில் செல்வதில்லை. சபை நிறைவடைந்த பின்னரே செல்வதாகவும் தெரிவித்தார். அத்துடன் சபையில் தலைவர் வெளியில் சென்ற பின்னரே ஏனைய உறுப்பினர் செல்வார். ஆனால் இங்கு அப்படி இல்லாது கூட்டம் நிறைவடைந்தது என்றதும் அனைவரும் வெளியில் செல்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் உறுப்பினர் வெளிச்செல்லும் போது எழுந்து நின்று அனுமதி பெறுவதன் மூலம் நேரம் பதிவிடுவதற்கான அவகாசம் வழங்கப்படும். அவ்வாறு

தவிசாளர் அனுமதி மூலம் நேரம் பதிவிடப்படும். இவை முறைப்படி நடைபெறவேண்டும். என பிரதேசசபைச் சட்டத்தில் உள்ளது. ஆனால் இவ்வாறு அனுமதி பெற்றுச் செல்வதை பின்பற்றுவதில்லை. இதற்கு ஒரு உத்தியோகத்ததை நியமிக்கலாம் எனத்தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த உள்வரும், வெளிச்செல்லும் நேரங்கள் பதிவிடல் நடைமுறையில் உள்ளது எனத் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் சபையில் கருத்து பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்கள் கருத்துரைக்கையில் எமது கௌரவ சபையின் கௌரவம் பாதிக்காத முறையாக ஒவ்வொருவருக்கும் அவசர தேவை இருக்கும். அந்தவகையில் சபையின் தவிசாளர் அனுமதி பெறுவது ஒரு நடைமுறை. அதனை பின்பற்றுவது கௌரவ சபையின் கௌரவ பேணுவது ஒவ்வொருவரது கடமை எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் சபையில் நடைபெறும் சில விடயங்களை பார்க்கையில் பிரேரணை கொண்டு வந்து கதைக்கின்றார்கள். அவை நிறைவடையும் முன்னர் அவர்கள் வெளியில் சென்று விடுகின்றனர். அதன் மூலம் என்ன நடைபெறுகின்றது எனத் தெரிவதில்லை எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் கருத்துரைக்கையில் தம்மால் அவதானிக்கப்பட்ட விடயம் என்னவெனில் சபைக்கூட்டம் நடைபெறும் போது பல தடவைகள் வெளியில் செல்கின்றனர். புகைப்படம் எடுக்கின்றனர். சபை முடிவடையும் வரை வெளியில் இருக்கின்றனர். எல்லோரும் கௌரவ உறுப்பினர்கள். வெளி இருக்கையில் இருப்பவர்கள் ஏன் சபைக்கூட்டத்தில் இருக்க முடிவதில்லை. தாம் முன்னைய தவிசாளர் இருக்கும் போது இரு தடவைகள் வெளியில் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. அதன்போது கௌரவ தவிசாளர் அருகில் சென்று அனுமதி பெற்றே சென்றுள்ளேன். எனக் கேட்டார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் கருத்துரைக்கையில் தாமதமாக வருகை தரும் போது கௌரவ தவிசாளர் அனுமதி பெறுவதும் வெளிச்செல்லும் போது அனுமதி பெற்றுச் செல்வதும் சபைக்கு சிறப்பு. சபைக்கூட்டம் நடைபெறும் போது அடிக்கடி வெளிச்செல்வது அழகில்லை எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் கௌரவ உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அதனை உணர்ந்து இனிவரும் காலங்களில் இதனை ஒரு சபையின் நடைமுறையாகக் கொண்டுவருவோம் எனவும் இதற்கு எல்லா கௌரவ உறுப்பினர்களும் கட்டுப்பட வேண்டும் எனத் தாம் தாழ்மையாகக் கேட்டுக்கொள்வதாகவும் இதனை கௌரவ உறுப்பினர்கள் பின்பற்றுவார்கள் என்பதை தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

அடுத்து நிகழ்ச்சிநிரலில் 11வது விடயம் மகளிர் தின நிகழ்வுக்கான சபை அனுமதி பெறல். எதிர்வரும் மார்ச் மாதம் 08ம் திகதி மகளிர் தினம் வரவுள்ளதால் நாம் கௌரவ அளுநர் அவர்களிடம் முன்அனுமதி பெறவேண்டிய காரணத்தால் இன்றைய தினம் அதற்கான தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. மகளிர்தினம். சிறுவர் மற்றும் முதியோர் தினம் ஆகியவற்றினை உள்ளடக்கியதாக ரூபா 2 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் மகளிர் தினத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்குவதெனவும் என்ன செய்யப்போகின்றோம் என்பது தொடர்பாக சபை தீர்மானிக்க வேண்டும் எனவும் கௌரவ தவிசாளர் அவர்கள் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அனுமதியுடன் செயலாளர் அவர்கள் கருத்துரைக்கையில் மகளிர் தினம், முதியோர் தினம், சிறுவர் தினம் ஆகிய மூன்றினையும் உள்ளடக்கி ரூபா 2 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் குறிப்பிட்ட பகுதியை எடுத்து என்ன நிகழ்வு செய்யப் போகின்றோம் என்பதனை கௌரவ ஆளுநர் அனுமதியைப் பெற்று நிகழ்வு செய்ய வேண்டும். அதற்கு இம்மாதமே அனுப்பினால் தான் அனுமதி பெறலாம் எனத்தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் கருத்துரைக்கையில் எமது பெண்கள் மற்றும் சிறுவர்குழு கூடி ஆராய்ந்து முடிவு எடுப்பது சிறந்தது எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தமக்கு 2021ம் ஆண்டுக்கான சுயதொழில் முயற்சியாளர் விருது மார்ச் 08ம் திகதி கொழும்பு

தாமரைத்தாடகத்தில் இடம்பெறவுள்ளதால் தாம் குறித்த நிகழ்வின் திகதி எப்போது செய்யலாம் எனத்தெரிவித்த போது கௌரவ தவிசாளர் அவர்களினால் மகளிர் தினம் குறித்த மார்ச் 08 திகதியே அன்றைய தினமே கொண்டாடப்பட வேண்டும். அத்துடன் தங்கள் சேவைகளும் அர்ப்பணிப்புக்களுக்கும் மக்களுக்கு தேவை அதனை தொடர்ந்தும் செயற்படுத்த வாழ்த்துக்கள் தெரிவிப்பதாகத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் மகளிர் தினம் மார்ச் 08ம் திகதியில் மாற்றம் இல்லை. அதற்கான நிதி, அதற்கான நிகழ்ச்சி நிரல் வரும் சபைக்கூட்டம் வரை தாமத்திக்காது மிகவிரைவில் வழங்குவதற்கு சபை அனுமதியினைக் கோரினார். அதனைத் தொடர்ந்துகுறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு பெண்கள் மற்றும் சிறுவர் குழு கூடி விரைவில் நிகழ்ச்சி நிரல் வழங்குவதெனவும் குறிப்பிட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/33**

2022ம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட நிதியேற்பாட்டில் 607(1B) எனும் தலைப்பில் ஒதுக்கப்பட்ட 200,000.00 நிதியில் இருந்து ரூபா 120,000.00 நிதியைப் பயன்படுத்தி சர்வதேச மகளிர் தின நிகழ்வினை கௌரவ ஆளுநர் அவர்களது அனுமதியினைப் பெற்று மேற்கொள்வதென கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து 12வது விடயம் வரவு செலவுத்திட்டஒதுக்கீட்டில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டோருக்கான கழிப்பறை வசதிகள் தொடர்பான தீர்மானம் பெறல். குறித்த திட்டத்திற்கு பாதிட்டில் 3.6மில்லியன் நிதி வட்டார ரீதியில் இரண்டு என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக இதனை மிக விரைவாக சபைக்கு ஒப்படைக்க வேண்டும். கௌரவ உறுப்பினர்கள் உங்கள் வட்டாரத்திலுள்ள வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களில் மலசலவசதி அற்றவர்களின் பெயர் விபரங்களை பெற்று அதனை GS ஊடாக DS உறுதிப்படுத்த வேண்டும். வரும் கூட்டத்திற்கு முன்னர் அனைத்து உறுப்பினர்களும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். அவர் மேலும் கூறுகையில் வரும் சபைக்கூட்டத்திற்கு முன்னர் சமர்ப்பிக்க தவறின் வெளியாட்கள் மூலம் தகவல் பெறப்பட்டு GS,DS உறுதிப்படுத்தி கழிப்பறை வசதி வழங்கப்படும். அனைத்து உறுப்பினர்களிடமும் இதனை மிக விரைவாக குறித்த விபரத்தினை வரும் 2022.02.05ஆம் திகதிக்கு முன்னர் வழங்கி உதவுமாறு வினயமாக கேட்டுக்கொள்வதாக தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் கருத்துரைக்கையில் எல்லா வட்டாரத்திலும் 2 மலசலகூடம் தேவைப்படாது. சில இடங்களில் ஒன்றும் தேவைப்படும். இரண்டிற்கு மேல் தேவைப்படும் வட்டாரங்களுக்கு உள்ளது. ஆகவே இதனை ஒரு புள்ளி விபரமாக எடுத்து அதனை சரியான முறையில் செயற்படுத்துவது நன்று எனத்தெரிவித்தார்.

அதற்கு பதிலிளித்த கௌரவ தவிசாளர் நல்ல விடயம். வட்டாரத்திற்கு 2 என ஒதுக்கப்பட்டது. ஆனால் 11ம், 12ம் வட்டாரங்களில் அதன் தேவைப்பாடு கூடுதலாக இருக்கும் எனத் தாம் நினைப்பதாகவும் குறிப்பிட்டதுடன் ஆனால் அதற்கான நிதி உதவிகள் வேறு வேறு திணைக்களங்களால் வரவுள்ளது. அதன் மூலமாக அதனை திரும்பச் செய்வோம் எனத் தெரிவித்தார். அத்துடன் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்ட விடயம் முக்கியமானது. அங்கு தான் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்கள் அதிகம் உள்ளனர். வட்டார உறுப்பினர்கள் யாராவது விரும்பின் குறித்த வட்டாரத்திற்கு உதவி வழங்கலாம் என்றும் அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு வட்டாரங்களில் மலசலகூடவசதி தேவையில்லாத விடத்து அவற்றை தேவை அதிகமுள்ள வட்டாரங்களுக்கு வழங்கலாம் என சபையினரால் தெரிவிக்கப்பட்டது. அதன்போது மலசலகூடம் வழங்குதல் தொடர்பிலான விளக்கத்தை செயலாளர் வழங்குவார் எனத் தெரிவித்தார்.

அதன் போது கௌரவ தவிசாளர் அனுமதியுடன் செயலாளர் அவர்கள் விளக்கமளிக்கையில் குறித்த பயனாளியில் பெயரின் காணி உறுதி இருக்க வேண்டும். அவர் வறுமைக்கோட்டிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். கழிப்பறை வசதியில்லை என்பதை DS உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். அத்துடன் சென்ற முறை வீட்டுத்திட்டம் ஒன்றை கொண்டு வரும் போது எம்மிடம் கேட்கப்பட்ட விடயம் உங்கள் பகுதியில்

காணி ஒரு பரப்பின் விலை மில்லியன் அளவில் உள்ளது. அவரால் ஒரு வீடு கட்டுவதற்கு வசதியில்லாது நீங்கள் திட்டம் வழங்குவது எவ்வகை எனக் கேட்கப்பட்டது. அதனையும் கருத்தில் கொண்டு தெரிவு செய்து சாலச் சிறந்தது எனத் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டது.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி கருத்துரைக்கையில் திருநெல்வேலிப்பகுதியில் வெளிநாட்டில் வசிப்பவரின் காணியில் அவர்களது சம்மதத்துடன் 30 குடும்பங்கள் வீடமைத்துள்ளனர். அவர்களுக்கு மலசலகூடம் இல்லையெனில் வழங்குவீர்களா எனக் சபையில் கேட்ட போது சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது எனில் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களினால் கோண்டாவிலில் புதுக்கோட்டை எனும் பகுதியில் இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கு சொந்தமான காணி உள்ளது அவர்களுடன் கலந்துரையாடி அங்கு 99 வருடங்களாக குடியிருக்கின்றனர். அங்குள்ளவர்களுக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெறவில்லை. தற்போது கோயில் நிர்வாகத்துடன் கலந்துரையாடி குறித்த காணியை அங்குள்ளவர்களுக்கு வங்குவதாக தெரிவித்துள்ளனர். அப்பகுதியில் உள்ளவர்களுக்க மலசலகூடம் இல்லை என்றால் என்ன செய்வது எனக் கேட்டார். அவ்விடயம் சபையில் ஆராயப்பட்டு குத்தகைதாரர் சம்மதத்துடன் தாம் உரிமை கோர மாட்டோம் என்ற கடிதம் தேவை. ஆவணங்கள் யாவும் உரிய தரப்பினரால் உறுதிப்படுத்தப்பட்டதாக இருப்பது முக்கியமானது எனத் தெரிவிக்கப்பட்டது.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் ஒரு வட்டாரத்திற்கு இரு மலசலகூடம் என நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மதிப்பீடுகளும், கேள்வி கோரும் சந்தர்ப்பத்தில் எமது நிதி ஒதுக்கீட்டில் நிறைவான வேலைத்திட்டங்களை செய்யும் சந்தர்ப்பங்கள் அமையும் என நம்புவதாகவும் வட்டார ரீதியான வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களில் மலசலகூடவசதி அற்றவர்கள் விபரத்தினை வரும் 2022.02.05ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதென தீர்மானிக்கப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/34**

2022ம் ஆண்டு பாதீட்டில் வறுமைக்கோட்டிற்குட்டபட்ட மலசலகூட வசதியற்றவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 3.6 மில்லியன் நிதியில் DS உறுதிப்படுத்தலுடன் வட்டாரத்திற்கு இரு மலசலகூடம் என வழங்குவதுடன் எமக்கு மேலதிக நிதி கிடைக்கும் சந்தர்ப்பத்தில் தேவையின் அடிப்படையில் ஏனைய வட்டாரத்திற்கும் கௌரவ ஆளுநர் அனுமதி பெற்று வழங்குவதெனவும் கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து பெப்ரவரி மாதம் கீழ்வரும் உத்தியோகத்தர்களுக்கு இடர்கடன் வழங்கவதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/35**

பெப்ரவரி மாதம் கீழ்வரும் உத்தியோகத்தர்களுக்கு இடர் கடன் வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- திருமதி.க.அபிராமி - 250000.00
- திரு.செ.ஞானசீலன் - 250000.00

ஏனைய விடயத்தில் அடுத்து பொதுச்சந்தையிலிருந்து 500 M ற்கு அப்பால் கடைகளில் மரக்கறிகள் சில்லறையாக வியாபாரம் செய்வதற்கு சபை அனுமதி. குறித்த விடயம் தொடர்பாக சந்தையில் இருந்து 500M அப்பால் மரக்கறிவகை கடைகளில் வியாபாரம் செய்யலாம். 500M குறைவாக பிரதேசத்தில் வியாபாரம் செய்ய முடியாது. அந்த வகையில் 500M அப்பால் வியாபாரம் செய்வதற்கு கோரிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கான சபை அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/36**
பொதுச்சந்தையிலிருந்து 500 மீற்றருக்கு அப்பால் கடைகளில் மரக்கறிகள் சில்லறையாக வியாபாரம் செய்வதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து அவசரமாக வலையம்மன் சனசமூக நிலையம் தொடர்பான சபையில் விவாதிப்பதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் சபையிடம் அனுமதி கோரியதன் அடிப்படையில் கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராஜா அவர்கள் வழிமொழிய குறித்த விடயம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து வாலையம்மன் சனசமூகநிலைய எதிர்கால விடயங்களை கையாள்வது தொடர்பில் சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஆலோசனைக்கு அமைவாக வாலையம்மன் சனசமூகநிலைய புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு பழைய நிர்வாகத்தினரிடம் தங்கள் வசமுள்ள கணக்கறிக்கைகள். தளபாடங்கள் கட்டடங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை புதிய நிர்வாகத்திடம் ஒப்படைக்குமாறு தெரிவித்தும் இதுவரை ஒப்படைக்கவில்லை என்பதுடன் அதற்கு சம்மதிப்பதாகவும் தெரியவில்லை. அவர்கள் சபையின் தீர்மானத்திற்கும் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகத்திற்கும் எதிராக புதிதாக ஒரு நிர்வாக சபையினை தெரிவுசெய்வதாக அறிய முடிகின்றது. அந்தவகையில் உறங்கு நிலையிலுள்ள சனசமூக நிலையத்தை இயங்கு நிலைக்கு மாற்றுவதற்கு குறித்த வாலையம்மன் சனசமூகநிலைய கட்டடத்தையும், அங்குள்ள சொத்துக்களையும் சபை பொறுப்பெடுத்து புதிய நிர்வாக சபையிடம் வழங்க ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் தொடர்பாக சபையினுடைய ஏகமனதான அனுமதியினை கோருகின்றேன் என கௌரவ தவிசாளர் அவர்களால் கருத்து முன்வைக்கப்பட்டது. அதற்கமைவாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராமசேவையாளர். பொலிஸ்பிரதிநிதி, பிரதேசசெயலக பிரதிநிதி மற்றும் பிரதேசசபை ஆகியோர் இணைந்து இதில் ஆர்வமுள்ள கௌரவ உறுப்பினர்களும் கலந்து குறித்த கட்டடத்தை கையகப்படுத்தி அதனை பெற்று புதிய நிர்வாகத்திடம் வழங்குவதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/37**
வலையம்மன் சனசமூக நிலைய கட்டடம் மற்றும் சொத்துக்களை தவிசாளர் தலைமையில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராமசேவையாளர், பொலிஸ் பிரதிநிதி, பிரதேச செயலக பிரதிநிதி, ஆகியோரா் உள்ளடக்கிய குழு நாளைய தினமே உரிய இடத்திற்குச் சென்று ஆய்வு செய்வதெனவும், சனசமூகநிலைய முன்னாள் செயலாளரிடம் உடனடியாக கட்டடத்திறப்பை ஒப்படைக்க கோருவது எனவும், திறப்பு ஒப்படைக்காது விட்டால் குழு அங்கத்தவர் முன்னிலையில் கட்டடத்தை கையகப்படுத்தி ஆய்வு செய்து சொத்துக்களை கணக்கெடுத்து அறிக்கைப்படுத்திய பின் புதிய நிர்வாகத்திடம் முறைப்படி கையளிப்பதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திடமிருந்து வெளிவாரி அடிப்படையில் 25 ஊழியர்களை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தால் சனசமூக நிலையத்திடமிருந்து மேற்படி தொழிலாளர்களை 6 மாதங்களுக்கு பெற்றுக்கொள்வது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு சபையானது குழு நிலைக்கு மாற்றப்பட்டது.

குழுநிலையில் குறித்த விடயம் விரிவாக ஆராயப்பட்டது. அதன்போது நல்லூர் பலநோக்கு சங்கத்திடமிருந்து ஒழுங்கான தேவைக்கு ஏற்ப 25 ஊழியர்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் வினைத்திறனாக இயங்கும் சனசமூகநிலையத்திடம் இருந்து 25 தொழிலாளர்களை வெளிவாரி அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் எந்த சனசமூக நிலையத்திடம் இருந்து தொழிலாளர்கள் பெறப்பட்டது என்ற விபரத்தனை

அடுத்து வரும் சபைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்ததை தொடர்ந்து சபைநிலைக்கு மாற்றப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/38**
திண்மக்கழிவகற்றல், வீதியோரத்துப்பரவு மற்றும் தரம்பிரித்தல் செயற்பாடுகளுக்கு வெளிவாரி அடிப்படையில் நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஊடாக சேவையினைப் பெற்று வந்த போதிலும் எமது தேவைக்கு ஏற்ப 25 ஊழியர்களை அவர்களால் கிரமமாக வழங்க முடியாது இருப்பதனால் நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை இரத்துச்செய்து பொருத்தமான சனசமூக நிலையத்திடமிருந்து மேற்படி தொழிலாளர்களை 6 மாதங்களுக்கு பெற்றுக்கொள்வதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் பி.ப.4.20 மணியளவில் சபைக்கூட்டத்தில் இருந்து வெளியேறினார்.

ஏனைய விடயத்தில் அடுத்து எமது கௌரவ உறுப்பினர்களான திரு.சு.விஜயகுமாரன், திரு.க.குகானந்தன் ஆகியோர் சுகயீனம் காரணமாக இன்றைய கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியவில்லை என அறியத்தந்தள்ளனர் அவர்களுக்கான விடுமறை அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/39**
எமது கௌரவ உறுப்பினர்களான திரு.சு.விஜயகுமாரன், திரு.க.குகானந்தன் ஆகியோர் சுகயீனம் காரணமாக இன்றைய (11.01.2022) கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியவில்லை என கடிதமூலம் அறியத்தந்துள்ளமையினை கௌரவ சபை ஏற்று அவர்களது விடுமுறைக்கான அனுமதியினை வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து திருநெல்வெலிச் சந்தைப் பகுதியில் வீதியில் போக்குவரத்தினை இடையூறற்ற வகையில் ஒழுங்குபடுத்தல் தொடர்பான தீர்மானம். குறித்த விடயம் தொடர்பாக எமது RI ஊடாக சில விடயங்கள் தரப்பட்டுள்ளன எனத்தெரிவித்து அவற்றினை சபைக்குத் தெரிவித்தார். அந்தவகையில் திருநெல்வேலிப்பகுதியில் திருநெல்வேலிசந்தியில் இருந்து ஆடிய பாதம் வீதியில் இரு புறங்களும் வவாகனங்கள் நிறுத்தப்படுகின்றது. அதனை ஒரு புறம் நிறுத்துதல். அதனை விளம்பரப்படுத்தல். அதாவது திங்கள். புதன். வெள்ளி. ஞர்யிறு ஒரு புறமும் செவ்வாய். வியாழன், சனி ஒருபுறம் என விளம்பரம் காட்சிப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கும் அத்துடன் மொத்த வாழைக்குலை வியாபாரிகள் கீழ் தளத்தில் சில்லைறையாக வாழைப்பழத்தை விற்பனை செய்வதால் மேல்தளத்திலுள்ள வியாபாரிகளுக்கு வியாபார நடவடிக்கைகள் பாதிப்படைகிறது. இதனை சுட்டிக்காட்டி பல முறை கடிதம் வழங்கியும் அவர்கள் நிறுத்துவதாகத் தெரியவில்லை. ஆகவே மொத்த வாழைக்குலை வியாபாரிகள் சில்லைறையாக விற்பனை செய்ய முடியாது என இறுதி அறிவித்தல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதனை மீறி சில்லறைக்கு வியாபாரம் செய்வார்களாயின் முன்னறிவித்தல் இன்றி குறித்த இடத்தை தற்காலிகமாக சபை பொறுப்பேற்பதற்கு சபை அனுமதி கோரிய போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/40**
மொத்த வாழைக்குலை வியாபாரிகள் சில்லைறையாக விற்பனை செய்ய முடியாது என இறுதி அறிவித்தல் வழங்குவது எனவும், அதனை மீறி மீண்டும் சில்லறைக்கு வியாபாரம் செய்வார்களாயின் முன்னறிவித்தல் இன்றி குறித்த இடத்தை தற்காலிகமாக சபை பொறுப்பேற்பதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அடுத்து திருநெல்வேலிச்சந்திப்பகுதியில் இருந்து ஆடியபாதம் வீதி காளிகோயில் வரை பொங்கல் தினத்தை முன்னிட்டு ஒருவழிப்பாதையாக பத்திரிகையில் அறிவித்தல் வழங்குவதற்கும் பொங்கல்

தினத்தை முன்னிட்டு சந்தை பகுதியில் கரும்பு வெடி பொருட்கள் விற்பவர்கள் முன் அனுமதி பெறுதல், வாகனங்கள் ஒருபுறம் நிறுத்துவதை கண்காணிப்பதற்கு ஒருவரை நியமித்தல், மற்றும் சந்தைப்பகுதி ஒழுங்குபடுத்தல் ஆகிய குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/41**

தைப்பொங்கலை முன்னிட்டு சந்தைப்பகுதியினை ஒழுங்குபடுத்தும் முகமாக எதிர்வரும் 2022.01.13ம் திகதி அதிகாலை 5.00மணி தொடக்கம் மாலை 8.00மணி வரை திருநெல்வேலிச்சந்திப்பகுதியில் இருந்து ஆடியபாதம் வீதி காளிகோயில் வரை உள்ள வீதியை ஒருவழிப்பாதையாக பயன்படுத்துவதென என பத்திரிகையில் பொதுமக்களுக்கு அறிப்பதெனவும் அதனை போக்கவரத்து பொலிஸாருக்கும் கடிதம் அனுப்புவதெனவும் கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்களது ஐயவினாக்களில் முதலாவது நல்லூர் பிரதேசசபைக்கு சொந்தமான கோண்டாவில் ஐயப்பன் கோயில், திருநெல்வேலி கலாசாலை விதியில் இராணுவமுகாம் அமைந்துள்ள இடம், நல்லூர் பிரதேசசபை உப அலுவலகத்திற்கு அருகிலுள்ள பாதையில்லாக்காணி என்பவற்றின் தொடர் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது.

பதில்: ஐயப்பன் ஆலயம் அமைந்துள்ள காணிக்கு ஆலய நிர்வாகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரதி கௌரவ உறுப்பினருக்கு அனுப்பி வைக்கப்ட்டுள்ளது. அத்துடன் பாதையில்லாக் காணிக்கான முன் காணி பெறுவதற்கு கலந்துரையாடி வருகின்றேன். அவர்கள் இணங்கும் சந்தர்ப்பம் அமைகிறது. கூடிய விரைவில் அதனை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மற்றும் கலாசாலை வீதியிலுள்ள இராணுவ முகாமிற்கு நாம் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு தான் கடிதம் அனுப்ப வேண்டும் என்றார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலியங்கம் அவர்கள் தாம் பாதையில்லாக்காணி வழங்கிய விரிவுரையாளர் அவர்களை சந்திப்பதற்கு முயற்சி செய்து ஏன் அவ்வாறு பாதையில்லாது காணியை வழங்கினீர்கள் என்பது தொடர்பாக குறித்த நபர் இருக்கு இடத்திற்கு சென்றதாகவும் அவரை சந்திக்க முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் பழைய விடயங்களை விடுத்து நடக்கப்போவதை விழிப்பாகவும் கவனமாகவும் பார்த்து அதற்கான தீர்வினை பெற்று தொழில்பேட்டை அமைப்போம் எனத்தெரிவித்தார்.

இரண்டாவது நல்லூர் பிரதேசசபைக்குரிய கலாசாலை வீதியில் அமைந்துள்ள காணியில் தற்போது இராணுவப் பாவனையில் உள்ளது. மக்கள் செறிந்து வாழும் பகுதியில் பயப்பீதியை ஏற்படுத்துவதாக உள்ளது. எனவே அக்காணியை நல்லர் பிரதேசசசபையினால் பயன்படுத்துவதற்கு ஆளுநர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பத்தை சமர்பிக்குமாறு வேண்டுகின்றேன்.

பதில்: ஒரு தீர்மானமாக எடுத்து அதனை கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அனுப்புவோம் எனத் தெரிவித்தார்.

மூன்றாவது கேள்வி நல்லூர் பிரதேசசபையின் கொக்குவில் பகுதியில் ஒரு திருமண மண்டபம் கட்டப்பட்டு பல வருடங்களாக எதுவித செயற்பாடுகளும் இல்லாத நிலையில் இருக்கின்றது. அதனை திறப்பதற்கு பலமுறை விண்ணப்பித்தும் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்று மக்கள் மத்தியில் ஒரு பாரிய குறைபாடு இருப்பதை அவதானிக்க முடிகின்றது. எனவே இதற்பாக அனுமதியை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பதில்: கட்டடக்குழுவில் RDD சிபார்சு கிடைக்கப்பெறாமையால் அதற்கான அனுமதி வழங்க முடியிவில்லை. RDD அனுமதி அளிக்கும் சந்தர்ப்பத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதன்போது குறித்த கட்டடம் அமைக்கும் போது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கௌரவ உறுப்பினர் கோரினார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அனுமதியுடன் செயலாளர் அவர்கள் பதிலளிக்கையில் தமது காலத்திலேயே குறித்த அனுமதியற்ற கட்டடம் அமைக்கும் போது நேரடியாகச் சென்று நிறுத்தப்பட்டது. உரிய அனுமதி பெறுமாறு கோரப்பட்டது. பின்னர் சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டது. அதன் பின்னர் கட்டட விண்ணப்ப பத்திரம் பெறப்பட்டு சுனுனு அனுப்பப்பட்டது. அவர்களினால் சிபார்சு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து அக்காலத்தில் தம்மால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

நான்காவது கேள்வி:12.11.2021ம் அன்று நடைபெற்ற கூட்டத்தில் நல்லூர் பிரதேசசபைக்குரிய காணிகளில் எழுதியவர், எழுதிய திகதி, என்பன தரப்பட வேண்டுமென செயலாளரால் உறுதி கூறப்பட்டது. அதனை சமர்ப்பிக்கவும்.

பதில்: சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது கேள்வி: நல்லூர் பிரதேசசபையில் கொக்குவில் மேற்கு ஆடியபாதம் வீதியில் முச்சக்கரவண்டி நிறுத்துவது பாதிப்பாக இருப்பதனால் பாடசாலை தொடங்குவதற்கு முன்னராக அப்பகுதியில் No Parking Board அமைக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

பதில்: விரைவில் அமைக்கப்படும்.

கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் பி.ப.4.35 மணியளவில் சபைக்கூட்டத்தில் இருந்து வெளியேறினார்.

அடுத்து ஏனையவை என்ற விடயத்தில் அனைத்து மயானங்களுக்கும் அவற்றின் இயங்கு நிலையினை கூட்டுவதற்கான இவ்வருடம் அனைத்து மயானங்களுக்கும் புதிய நிர்வாக சபையினை அமைப்பதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/42**
எமது சபைக்குட்டபட்ட அனைத்து மயானங்களின் மயான சபைகளை கலைத்து புதிய நிர்வாக சபையினை அமைப்பதென கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ தவிசாளர் அவர்களுக்கான வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனம் தொடர்பாக சென்ற மாதக் கொடுப்பனவு வழங்க வேண்டும். ஒப்பந்தத்தில் 1800 Km ஆகக்கூடிய தூரம் என தீர்மானிக்கப்பட்டது. கடந்த மாத இறுதியில் மத்துகமவில் கௌரவ தவிசாளருக்கு இடம் பெற்ற பயிற்சி பட்டறைக்கு சென்று வந்தமையினால் 1816 km பயணிக்க வேண்டி இருந்தது. அதனால் சென்ற மாத ஓட்டத்தூரம் 305 Km அதிகரித்துள்ளது. குறித்த 1800Km விட கூடிய ஒவ்வொரு Km ரூபா 55 வீதம் ரூபா 16775.00 சேர்த்து ரூபா 141775.00 வழங்குவதற்கு சபை அனுமதி கோரப்பட்டது. அதனைத் தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/43**
தவிசாளர் அவர்களுக்கான வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனம் தொடர்பாக மத்துகமவில் கௌரவ தவிசாளருக்கு இடம் பெற்ற பயிற்சி பட்டறைக்கு சென்று வந்தமையினால் 1800Km உட்படபட்ட ரூபா 125000.00 வுடன் மேற்பட்ட 305Km க்கும் சேர்த்து மொத்தம் ரூபா 141775.00 கொடுப்பனவு செய்வதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் CDLG திட்டத்தில் ஏற்கனவே கௌரவ தவிசாளர் அவர்களினால் தெரிவிக்கப்பட்டதற்கு அமைவாக எமக்கு 9மில்லியன் ரூபா Formance ற்கான முதல் வழங்கப்பட்டுள்ளது. அதில் சபை அனுமதியுடன் முதல் கட்ட வேலைக்கான அனுமதி கிடைத்துள்ளது அதில் பெண்கள் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பினை அடிப்படையாகக் கொண்ட IT மற்றும் தையல் பயிற்சிகளுக்கு ஆட்களை தெரிவு செய்வதற்கான சபையிடம் அனுமதி கோரப்பட்ட போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/44**

CDLG திட்டத்தின் கீழ் பெண்கள் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பினை அடிப்படையாகக் கொண்ட கணனிப்பயிற்சி மற்றும் தையல் பயிற்சிகளுக்கு நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து ஆர்வம் உள்ளவர்களிடமிருந்து பத்திரிக்கையில் விளம்பரம் செய்து இரு பயிற்சிக்கும் விண்ணப்பம் கோரிப்பெற்றுக்கொள்வதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து எமது சபையில் உள்ள Lift இலவச பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது. அதற்கு அதனை பொருத்திய நிறுவனம் தான் செய்ய வேண்டியுள்ளது. பராமரிப்பு காலம் (free Service) 2021ம் ஆண்டு யூலை மாதத்துடன் முடிவடைந்துள்ளதால் ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் ஐந்து தடவைகள் Service மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய கொடுப்பனவு ரூபா 75000.00 அதற்குரிய vat கொடுப்பனவு என்பற்றினை வழங்கும் அவர்களுடனான ஒப்பந்த காலத்தை புதுப்பிக்கவும் சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/45**

மின்னுயர்த்தி (Lift) ற்கான ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் ஐந்து தடவைகள் Service மேற்கொள்ளப்படமைக்கான கொடுப்பனவு ரூபா 81000.00 வழங்குவதற்கு தழுவு அனுமதி வழங்குவதுடன் குறித்த நிறுவனத்துடனான ஒப்பந்த காலத்தை 2022.01.01 முதல் ஒரு வருடம் நீடிப்பதற்கும் சபை அனுமதி வழங்கவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து LDSP திட்டத்தில் கொக்குவில் சந்தையில் 2ம் கட்டத்திற்கான கட்டடவேலைகள் நடைபெற்று வருகின்றன. அதற்கான 1வது பகுதிக்கொடுப்பனவு ரூபா 887164.45 வினை வழங்க சபையின் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**தீர்மானம் 11.01.2022/46**

LDSP திட்டத்தில் கொக்குவில் சந்தையில் 2ம் கட்டத்திற்கான கட்டட வேலைக்கான 1வது பகுதிக்கொடுப்பனவு ரூபா 887164.45 வினை வழங்க சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து Construction of Pidary Amman Kovil Road Drainage Packge – 03 வேலைக்கான இறுதிக் கொடுப்பனவு ரூபா 2,446,408.68 வினை Sakthy Engineering வழங்க சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/47**

Construction of Pidary Amman Kovil Road Drainage Packge – 03 வேலைக்கான இறுதிக் கொடுப்பனவு ரூபா 2,446,408.68 வினை Sakthy Engineering வழங்க சபை அனுமதி வழங்குவதாக கௌரவ

உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து எமது அலுவலகத்தில் தற்போது நிரந்தர அடிப்படையில் கடமையாற்றும் திரு.ப.சுரேஸ் - வீதித்தொழிலாளி, திர.செ.ரமேஸ் - சுகாதாரத்தொழிலாளி, திரு.ந.இராஜன் - வீதித்தொழிலாளி ஆகியோரின் சமயாசமய அடிப்படையில் கடமையாறறிய போது அவர்களை ஓய்வூதியத்தில் உள்வாங்கும் போது 60% சபையின் பங்களிப்பு தொகை திரண்ட நிதிக்கு மாற்றப்பட்டு விட்டன. தற்போது இப்பணியாளர்கள் தமது சமயாசமய நியமன சேவைக்காலத்தை ஓய்வூதிய உரித்துடைய சேவைக்காலத்திற்காக கணிப்பிட வேண்டாம் எனவும், மேற்படி 60% சபைப் பங்களிப்பு தொகையினை தமக்கு மீளளிக்குமாறு கோரியுள்ளமையினால் அவற்றினை திரண்ட நிதியிலிருந்து கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதி பெற்று மீளளிப்பு செய்வதற்கு சபையின்அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/48**
எமது அலுவலகத்தில் தற்போது நிரந்தர அடிப்படையில் கடமையாற்றும் திரு.ப.சுரேஸ் - வீதித்தொழிலாளி, திர.செ.ரமேஸ் - சுகாதாரத்தொழிலாளி, திரு.ந.இராஜன் - வீதித்தொழிலாளி ஆகியோரின் சமயாசமய அடிப்படை சேவைக்காலத்தின் போதான 60% சபையின் பங்களிப்பு தொகைகள் முறையே ரூபா 65,424.48, ரூபா 124,700.43, ரூபா 109,734.15, ஆகிய தொகைகள் 200ம் இலக்க 2010.12.31ம் திகதிய உறுதிச்சீட்டு மூலம் திரண்ட நிதிக்கு மாற்றப்பட்டுவிட்டது. ஆனால் தற்போது இப்பணியாளர்கள் தமது சமயாசமய நியமன சேவைக்காலத்தை ஓய்வூதிய உரித்துடைய சேவைக்காலத்திற்காக கணிப்பிட வேண்டாம் எனவும், மேற்படி 60% சபைப் பங்களிப்பு தொகையினை தமக்கு மீளளிக்குமாறு கோரியுள்ளமையினாலும் அத்தொகையினை திரண்ட நிதியிலிருந்து பெற்று குறித்த ஊழியர்களுக்கு மீளளிப்பதற்கு ஏதுவாக கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதி பெற்று மீளளிப்பு செய்வதென கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கொக்குவில் உபஅலுவலக வளாகத்தினுள் வெள்ளம் புகுந்து சேதமடைந்தமை தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சினை நடைமுறைப்படுத்துவதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்ட கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.01.2022/49**
கொக்குவில் உப அலுவலக எல்லை மதில் கடந்த 2021.11.08 ஆம் திகதி பெய்த மழை காரணமாக இடிந்து விழுந்தமையால் புகையிரத பாதைக்கு சமாந்தரமாக ஓடும் வெள்ள நீர் திசைமாறி நூலக வளாகம் மற்றும் கட்டடத்திற்குள் புகுந்து கீழ் தளப்பகுதியில் பராமரிக்கப்பட்டு வந்த புத்தகங்கள் மற்றும் கணனி சேதமடைந்துள்ளதை உறுதிப்படுத்த நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சுக்கமைவாக நடவடிக்கை எடுப்பதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களினால் LDSP திட்டத்தில் வடமாகாணத்தில் எல்லா சபைகளுக்கு மத்தியில் மாநகர சபை உட்பட ஏனைய சபைகள் 73% மாக இருக்கும் போது நல்லூர் பிரதேசசபை 90% மிகவும் வினைத்திறனாக UNDP நிதியில் செயற்படுவதற்கு கௌரவ தவிசாளர் கௌரவ செயலாளர் ஒத்துழைப்பு மற்றும் உத்தியோகத்தர்கள் இனிவரும் காலத்திலும் இவ்வாறான வினைத்திறனான சபையாக செயற்படுவதற்கு மக்களின் ஒத்துழைப்பும் கௌரவ உறுப்பினர் ஒத்துழைப்பும் நிச்சயம் செய்வோம் எனவும் அத்துடன் இவ்வாறு வினைத்திறனாக செயற்பட்டு வரும் காலத்தில் விருதுகள் பல வெல்வோம் எனவும் வாழ்த்தி அமர்ந்தார்.

அதனைத்தொடர்ந்து சபைக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் கௌரவ தவிசாளர் அவர்களினால் நன்றிகள் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து சபைகூட்டமானது பி.ப. 4.45 மணியளவில் நிறைவடைந்தது.

செயலாளர்,